விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கணக்கீடு A/L 2026
(தமிழ் & ஆங்கில மொழி மூலம்)
பாலகஜன் (SLTS)
077 452 0043
யாழ்.நகரின் முன்னணி ஆசிரியரின்
பிரத்தியேக வகுப்பு ஆரம்பம்
◈ KBK → கொழும்புத்துறை → கந்தர்மடம்
◈ Zoom இன் ஊடாக இலங்கை பூராகவும்
(C-466)
☛ A/L 2024 & Day, A/L 2025 பிரிவுகளுக்கான புதிய வகுப்புக்கள் நடைபெறுகின்றது.
☛ யாழ்.நகரில் தொடர்ச்சியாக முன்னணி பெறுபேறுகளை வழங்கிவரும் ஆசிரியரிடம் கற்பதற்கான வாய்ப்பு

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 160 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 14 திங்கட்கிழமை (27.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## 13வது திருத்தத்தை தாமதமின்றி அமுல்படுத்துக



கரு ஜெயசூரிய வேண்டுகோள்

3ஆம் பக்கம் பார்க்க



## ஐ.நா அறிக்கை பக்கச்சார்பானது

இலங்கை சாடல்

5ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் ஆசிரியர் நியமனங்களுக்கு மீண்டும் விண்ணப்பம் கோரல்

வட மாகாண ஆளுநர்

6ஆம் பக்கம் பார்க்க

### கேப்பாப்பிலவு காணிப் பிரச்சினை

## துணிந்து போராடிய இரு பெண்கள்; சந்தித்தார் ஜனாதிபதி ரணில்



(முல்லைத்தீவு)

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில்'உறுமய'வேலைத் திட்டத்தின் கீழ் காணி உறுதிப் பத்திரங்களை வழங் கும் நிகழ்வில் பங் 15

## வவுனியா பல்கலையில் மருத்துவபீடம்; ஆதார வைத்தியசாலை போதனாவாகும்

### உறுதியளித்தார் ஜனாதிபதி ரணில்

(கிளிநொச்சி)

வவுனியா ஆதார வைத் தியசாலை போதனா வைத் தியசாலையாக மாற்றப்பட்டு, வவுனியா பல்கலைக்கழகத் தில் மருத்துவபீடம் ஆரம் பிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித் தார்.

நேற்று மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் நிர் மாணிக்கப்பட்ட வைத்திய புனர்வாழ்வு சிகிச்சை மற்றும் மனநல அபிவிருத்தி நிலைய திறப்பு விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் 15

## யாழ்ப்பாண ஆசிரியர் பாரம்பரியம் நாட்டுக்கு சிறந்த முன்னுதாரணம்

### ஜனாதிபதி ரணில் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் காணப் பட்ட யாழ்ப்பாண ஆசிரியர் பாரம்பரியம் நாட்டிலுள்ள ஆசிரியர்களுக்கு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

அந்தக் கல்வி முறையை மீளமைக் கத் தாம் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க தெரிவித்தார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் காலமானார்



(ராஜகிரிய)

இலங்கைக்கான பிரான்ஸ் நாட் டுத் தூதுவர் ஜீன் ஃபிராங்கோயிஸ் தனது 53ஆவது வயதில் நேற்று காலமானார்.

ராஜகிரிய பகுதியிலுள்ள அவரது உத்தியோகபூர் 15

## ரணிலின் வருகைக்கு எதிர்ப்பு வவுனியாவில் கறுப்புக் கொடி



(வவுனியா)

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க அவர்களின் வவுனியா வருகைக்கு எதிர்ப்பு தெரி வித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் 15

## ஒக். 17இல் ஜனாதிபதித் தேர்தல் எவராலும் அதனை தடுக்க முடியாது

### நீதியமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

(கொழும்பு)

இவ்வாண்டு ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி ஜனாதி பதித் தேர்தல் நடைபெறும். எக்காரணம் கொண்டும் அதனை எவராலும் தடுக்க முடியாது என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஹட்டன் நகரில் இடம்பெற்ற கலந்துரையாடல் 15

## இலங்கையில் மீண்டும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பா?

### ஆராய விசேட குழு நியமனம்

(கொழும்பு)

ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கர வாத அமைப்புடன் தொடர்பு டையவர்கள் இலங்கையில் இருக்கிறார்களா? என்பதைக் கண்டறிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் தற்போது அவசர விசாரணை கள் மேற்கொள்ளப் 15

## கொல்கத்தா சம்பியன்



04

## இன மேலாதிக்க மனோநிலையுடைய சிங்களத் தலைவர்களால் தீர்வு கிட்டாது

### ஜனாதிபதி ரணிலுக்கு சிறீதரன் எம்.பி பதிலடி



(கௌதாரிமுனை)

ஈழத்தமிழர்களுக்கான நிரந் தர அரசியல் தீர்வை அதிகார பூர்வமாக வழங்குவதற்குரிய சந்தர்ப்பங்களை தமிழ் மக்கள், சிங்களத் தலைவர்களுக்கு பலமுறை வழங்கியிருந்தும் அவர்கள் அவற்றை சரிவரப் பயன் படுத்த முன் வரவில்லை.

15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் பாராளுமன்றம் கலைக்கப்படாது

## அமைச்சர் பந்துல உறுதி



இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயமாக நடத்தப்படும் எனவும், அதற்காக வரவு செலவுத் திட்டத்தில் 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர், அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை இவ்வருடத்தில் நடத்துவது கட்டாயமாகும் எனவும் தேர்தலுக்கான திகதிகள் தேர்தல்கள் ஆணைக் குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். அதன்படி, இந்த ஆண்டு செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் தேர்தலை நடத்த வேண்டும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தற்போதைக்கு பாராளுமன்றம் கலைக்கப்பட மாட்டாது எனவும், அரசியல் வங்குரோத்து நிலையில் உள்ளவர்கள் மற்றும் அரசியல் கட்சிகளால் இவ்வாறான பொய்யான அறிக்கைகள் வெளியிடப்படுவதாகவும், சர்வஜன வாக்கெடுப்பு அல்லது வேறு வழிகளில் ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிக்கப்பட மாட்டாது.

ஜனநாயக ரீதியில் தேர்தலை நடத்துவதே ஜனாதிபதியின் நோக்கமாகும் எனவும், உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் முதலில் பொதுத் தேர்தலை நடத்தலாம் என்ற கருத்தை மறுத்த ஜனாதிபதி விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும் என அண்மையில் அமைச்சரவையில் தெரிவித்திருந்தார் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ந-7.10)

# காட்டு யானை தாக்கி வயோதிபர் பலி

(கொழும்பு)

கிராந்துருகோட்டை - பேரியல் சந்தியில் நேற்று காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்கான வயோதிபர் ஒருவர் பலியானார்.


குறித்த பகுதியைச் சேர்ந்த 82 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் பிரேத பரிசோதனை மகியங்கனை வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது குறித்த மேலதிக விசாரணைகளை கிராந்துருகோட்டை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ந-7.10)

# மரண அறிவித்தல்

பிறப்பு 1942 . 10 . 02



இறப்பு 2024 . 05 . 26

**சின்னத்தம்பி குகநமசிவாய முதலியார் (குகன்)**

(உரிமையாளர் - குகரதி புடவையகம் நெல்லியடி)

செங்குந்தர் வீதி கட்டைவேலி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் ராணி மில் வீதி நெல்லியடியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி குகநமசிவாய முதலியார்(குகன்) அவர்கள் (26.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பாக்கியம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் புனிதவதி, புஸ்பராணி, குருநமசிவாயம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற பரஞ்சோதி மற்றும் முருகமூர்த்தி, கலாநிதி ஆகியோரின் மைத்துனரும் குகமதி, காலஞ்சென்ற குகலக்சுமி மற்றும் குகரதி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வகுமார், மதியழகன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் செல்வநிதி, சானுயா, மகிணன், மகிஷா, மானஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2024) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேதக்களி இந்து மயானத்திற்கு முற்பகல் 10.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ராணி மில் வீதி,
நெல்லியடி, கர[illegible]

தகவல்: [illegible]

# யாழ்ப்பாண...

ஆசிரியர் தொழில் முன்மாதிரியாக இருக்க வேண்டும் ஆசிரியர்கள் கோசங்கள் எழுப்பிக் கொண்டு வீதியில் ஆர்ப்பாட்டம் செய்வதாக இருந்தால் மாணவர்களால் நிராகரிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்த ஜனாதிபதி, தொழில் கௌரவத்தைப் பேணுவது அனைத்து ஆசிரியர்களினதும் பொறுப்பு எனவும் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (25) இடம்பெற்ற யாழ்.மாவட்ட ஆசிரியர் நியமன நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

வடமாகாணத்தில் யாழ் மாவட்டத்தில் 375 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டதுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடையாள ரீதியில் சிலருக்கு நியமனங்களை வழங்கி வைத்தார்.

இதன்போது வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசொன்றை வழங்கினார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது,

இன்று ஆசிரியர் நியமனம் பெற்றுள்ள நீங்கள் அனைவரும் பெரும் பொறுப்பை ஏற்றுள்ளீர்கள். இன்று 35-40 மாணவர்கள் கற்கும் வகுப்பறையில் மாணவர்களின் எதிர்காலத்தை நீங்கள் பொறுப்பேற்கிறீர்கள். அந்தப் பிள்ளைகளின் எதிர்காலம் உங்களது வழிகாட்டுதலின்படி உருவாக்கப்படுகிறது. அந்தப் பொறுப்பை நிறைவேற்ற முடியாவிட்டால், நீங்கள் ஆசிரியர் தொழிலுக்கு உகந்தவர் அல்ல.

முன்பு யாழ்ப்பாண ஆசிரியர்களின் சேவை நாடளாவிய ரீதியிலும் சர்வதேச அளவிலும் மிக கௌரவத்துடன் பார்க்கப்பட்டது. அந்தப் பொறுப்பை அவர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் நிறைவேற்றினார்கள். நான் படித்த கொழும்பு றோயல் கல்லூரியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் இருந்தனர். அவர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றியதோடு , அவர்களின் விசேடமான அர்ப்பணிப்பின் காரணமாகவே யாழ்ப்பாணத்தில் பிரபல ஆசிரியர்கள் குறித்து இன்றும் சமூகத்தில் பேசப்படுகிறது. அந்த ஆசிரியர் பாரம்பரியம், நாட்டின் ஆசிரியர்களுக்கு ஆசிரியப் சேவை குறித்து சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது என்றே கூற வேண்டும்.

கல்வி உயர் மட்டத்தில் பேணப்பட்டதால் தான் யாழ்ப்பாணம் கட்டியெழுப்பப்பட்டது. யாழ்ப்பாணத்தில் உள்ள சில பாடசாலைகள் உலகம் முழுவதும் பெரும் புகழைப் பெற்றிருந்தன. ஹார்ட்லி கல்லூரி மாணவர்கள் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தங்கள் திறமையை வெளிப்படுத்தினர். எனவே, நீங்களும் அந்த கௌரவமான தொழிலில் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர் பணியில் நீங்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும். வீதியில் கோஷம் போட்டால் மாணவர்கள் உங்களை ஏற்க மாட்டார்கள். எனவே, உங்கள் பொறுப்பை சரியாக நிறைவேற்ற வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் அப்போது சிறந்த பாடசாலை முறைமையொன்று இருந்தது. நமது முன்னாள் சபாநாயகர்களில் ஒருவரான கே.பி. ரத்நாயக்க ஹார்ட்லி கல்லூரியில் கல்வி கற்றார். யுத்தம் காரணமாக ஆசிரியர்கள் பாடசாலையை விட்டு வெளியேறியதோடு அப்பாடசாலையும் வீழ்ச்சியடைந்தது. யாழ்ப்பாணத்தின் கல்வி முறை மீண்டும் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

வடமாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகள் உட்பட அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி யாழ்ப்பாணத்தில் பாடசாலை முறைமையை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வருவதற்கான திட்டங்களை அரசாங்கத்திற்கு வழங்குமாறு ஆளுநருக்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

தமிழ், சிங்கள மொழிக் கல்வியை மாத்திரம் மாணவர்களுக்கு வழங்குவது போதுமானதல்ல என்பதோடு ஆங்கில அறிவும் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். இது 10-15 வருட நீண்டகால வேலைத்திட்டம் என்றாலும் அதற்கான செயற்பாடுகளை இப்போதிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும்.

ஆசிரியர் தொழிலின் கௌரவத்தைப் பாதுகாத்து வட பகுதி பிள்ளைகளுக்காகச் சிறந்த சேவையை ஆற்றுவதற்கு தம்மை அர்ப்பணிக்குமாறு கேட்டுக்கொண்டு இன்று நியமிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ந-7.10)

**கணிப்பீட்டறிக்கை**

அதிபர், ஆசிரியர்களுக்கு மாணவர்களுக்கான தரம் 1 - 11 வரையான வகுப்புகளுக்குரிய கணிப்பீட்டறிக்கை, தரம் 1 - 5 அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் வெளிவந்து விட்டது. உடன் பெற்றுக்கொள்ளலாம்

**தயா அச்சகம்**

92 (150) நாவலர் றோட் யாழ்.
N.S.B வங்கி அருகில்
மனோகரா தியட்டர் சந்தி அருகாமையில்
077 3965 214, 077 4670 304

(897)

# கண்ணீர் அஞ்சலி

எனது தந்தை குமரையா தங்கராஜாவின் ஒன்றுவிட்ட சகோதரர்

## தம்பிநாதர் செல்லத்துரை



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், கனடா - மொன்றியலை வதிவிடமாகவும் கொண்ட எங்கள் சித்தப்பாவின் மறைவுக்கு எம்து ஆழ்ந்த அனுதாபங்கள்! இன்று (27) இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

தோற்றம் 05.05.1937 மறைவு 18.05.2024

தங்க.முகுந்தன்
077 727 9238

(C-0468)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தத்தை தாமதமின்றி அமுல்படுத்துங்கள்

## கரு ஜெயசூரிய வேண்டுகோள்



**(கொழும்பு)**

**அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதோடு சர்ச்சைக்குரிய காணிப் பிரச்சினையை உத்தேச காணி ஆணைக்குழுவின் ஊடாக தாமதமின்றித் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரசாங்கத்திடமும் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் நாம் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கின்றோம் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

அடுத்த தேர்தலுக்கு முன்னதாக நிலவும் இன மற்றும் மத அவநம்பிக்கையை தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அனைத்து தரப்பினரிடத்திலும் பகிரங்க கோரிக்கை விடுத்து வெளியிட்டுள்ள ஊடக அறிவிப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வரலாற்றைப் பார்க்கையில், 1948 இல் பிரித்தானியப் பேரரசில் இருந்து எமது நாடு சுதந்திரம் அடைந்தமைக்கு சிங்களம், தமிழ், முஸ்லிம் மற்றும் பறங்கியர் உட்பட அனைத்து இனத்தலைவர்களின் கூட்டு முயற்சியே காரணமாக இருந்தது.

அவர்களின் முயற்சிக்கு கிடைத்த வெற்றியே நாட்டின் சுதந்திரம் என்பதை நினைவு கூருகின்றோம். துரதிர்ஷ்டவசமாக, பிளவுபடுத்தும் இன மற்றும் மத போக்குகள் உட்பட அடுத்தடுத்து நிகழ்ந்தேறிய விடயங்கள் இந்த ஒற்றுமையை சிதைத்துவிட்டன.

தற்போதைய நிலைமையில் நாட்டின் அனைத்து நிலைமைகளும் எதிர்கால சந்ததியினர் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். எனவே, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தவும் சர்ச்சைக்குரிய காணிப்பிரச்சினையை உத்தேச காணி ஆணைக்குழுவின் ஊடாக தாமதமின்றி தீர்க்கவும் அக்கறையுடன் பரிசீலிக்குமாறு அரசாங்கத்திடமும் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் நாம் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மேலும், பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பாக குறிப்பாக வடக்கில் உள்ள அனைத்து பங்குதாரர்களுடனும் வெளிப்படையான மற்றும் நேர்மையான கலந்துரையாடல்களை தாமதமின்றி முன்னெடுக்குமாறும் நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் தேசத்தின் நலன்களுக்கு முன்னுரிமை அளிப்பது மற்றும் தீர்வு காண்பதற்கு ஆக்கபூர்வமான உரையாடல்களில் ஈடுபடுவது மிகவும் முக்கியமானதாகும்.

அடுத்த தேர்தலை நாம் நெருங்கும்போது, அனைத்து பங்குதாரர்களும் ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பு உணர்வோடு ஒன்றுசேருமாறு கேட்டுக் கொள்கிறோம். இந்த ஒன்றிணைவானது முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் அதன் மூலம் எதிர்கால சந்ததியினருக்கு வளமான இலங்கையை பரிசாக வழங்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார். (ரி-6)

# 2027 ஆம் ஆண்டு முதல் 12 வீதமாக குறையும் வற் வரி



(கொழும்பு)

2027ஆம் ஆண்டு முதல் வற் வரி விகிதத்தை 12 வீதமாகக் குறைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

நாட்டின் நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம் 2027ஆம் ஆண்டின் பின்னர் அனைத்து உற்பத்தி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சில்லறை மொத்த விற்பனை வர்த்தகத்தை வற் வரிக்கு உட்படுத்துவதன் மூலம் 2027 ஆம் ஆண்டு முதல் வற்வரி விகிதத்தை 12 வீதமாகக் குறைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

அவ்வாறு 2027 ஆம் ஆண்டில் வற் வரி 12 வீதமாகக் குறையும் போது வரியிலிருந்து விடுவிக்கப்படும் பொருட்களின் பட்டியல் ஒன்றும் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அவற்றுள் அரிசி, கோதுமை மா, சீனி, தேங்காய், மீன், மரக்கறிகள், பழங்கள், ஆங்கில, சிங்களம் மற்றும் யுனானி மருந்து வகைகள், புத்தகங்கள், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கிழங்கு, வெங்காயம், மிளகாய், மஞ்சள், உளுந்து போன்ற அனைத்துப் பொருட்களும் மக்களுக்கு அத்தியாவசிய மானவை அவை அனைத்தும் வற் வரியிலிருந்து விலக்களிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார். (ரி-6)

# பலத்த காற்றினால் பதுளை மாவட்டத்தில்

- ஒருவர் பலி
- இருவர் காயம்
- 114 வீடுகள் சேதம்




(பதுளை)

நாட்டில் கடந்த சில நாட்களாக வீசிய கடும் காற்றினால் பதுளை மாவட்டத்தில் 114 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் ஒருவர் உயிரிழந்து இருவர் காயமடைந்துள்ளதாகவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவிக்கிறது.

அதன்படி பதுளை மாவட்டத்துக்கு உட்பட்ட 15 பிரதேச செயலகப் பிரிவுகளில் ஏற்பட்ட சேதங்களின் விபரங்கள் பின்வருமாறு.

ஹப்புத்தளை பிரதேச செயலகப் பிரிவில் ஒருவர் உயிரிழந்துள்ளார், 2 பேர் காயமடைந்துள்ளனர்.

பதுளை, ஹாலிஎல, எல்ல, பண்டாரவளை, ஹப்புத்தளை, அல்துமுல்ல, வெலி மடை, ஊவா பரணகம, சொரணதொட்ட, கந்தகெட்டிய, மீகஹகிவுல, ரிதிமாலியத்த, மஹியங்கனை, பசறை மற்றும் லுணுகலை ஆகிய பகுதிகளில் வீடுகள் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

அத்தோடு, தற்போது நிலவும் கடும் காற்றினால் மரங்கள் முறிந்து விழும் அபாயம் காணப்படுவதால், மரங்கள் தமது வீடு மற்றும் அலுவலகத்துக்கு அருகாமையில் இருந்தால் மிகவும் அவதானமாக இருக்குமாறும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மக்களை கேட்டுக் கொண்டுள்ளது. (ரி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொல்கத்தா 'கொண்டாட்டம்'

## ● ஐ.பி.எல்லில் 3ஆவது கிண்ணம் வென்று உற்சாகம்
## ● 2ஆவது இடம்பிடித்து ஆறுதலடைந்தது ஹைதராபாத்



ஐ.பி.எல்., கிண்ணத்தை கொல்கத்தா அணி சுலபமாக வென்றது. பைனலில் 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஹைதராபாத் அணி இரண்டாம் இடம் பெற்று ஆறுதல் அடைந்தது.

சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று நடந்த 17வது ஐ.பி.எல்., தொடரின் பைனலில் கொல்கத்தா, ஹைதராபாத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணித் தலைவர் பாட் கம்மின்ஸ், "துடுப்பாட்டத்தை" தேர்வு செய்தார்.

**ஸ்ரார்க் மிரட்டல்**

ஹைதராபாத் அணி ஆரம்பத்திலேயே ஆட்டம் கண்டது. ஆடுகளம் பந்துவீச்சுக்கு ஒத்துழைக்க, கொல்கத்தா "வேகங்கள்" போட்டுத் தாக்கினர். ரூ.24.75 கோடிக்கு வாங்கப்பட்ட "காஸ்ட்லி" ஸ்ரார்க் சரியான நேரத்தில் திறமை நிரூபித்தார். முதல் ஓவரில், இவரது "சுப்பர்" பந்தில் அபிஷேக் வர்மா (2) போல்டானார். வைபவ் அரோரா வீசிய அடுத்த ஓவரில் டிராவிஸ் ஹெட் (0) "கோல்டன் டக்" அவுட்டானார். இரு அதிரடி வீரர்கள் விரைவில் நடையை கட்ட, 2 ஓவரில் 2 விக்கெட்டுக்களை இழந்து 6 ஓட்டங்களை மட்டும் எடுத்து தவித்தது. தொடர்ந்து "வேகத்தில்" மிரட்டிய ஸ்ரார்க் பந்தில் திரிபாதி (9) வெளியேறினார். 6 ஓவர்களில் 3 விக்கெட் டுக்களை இழந்து 40 ஓட்டங்களை எடுத்தது.

> **மூன்றாவது முறை**
>
> கொல்கத்தா அணி மூன்றாவது முறையாக (2012, 2014, 2024) ஐ.பி.எல்., கிண்ணம் வென்றது. சென்னை, மும்பை அணிகள் அதிகபட்சமாக தலா 5 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளன.

**7 விக்., 77 ரன்**

இதற்கு பின் ரன் ரேட்டை உயர்த்தும் முயற்சியில் ஹைதராபாத் வீரர்கள் விக்கெட்டை பறிகொடுத்தனர். நிதிஷ் (13) நிலைக்கவில்லை. ரசலிடம் மார்க்ரம் (20) வீழ்ந்தார். 12.4 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 77 ஓட்டங்கள் எடுத்து தத்தளித்தது. அணியை கரை சேர்ப்பார் என எதிர்பார்க்கப்பட்ட கிளாசன் (16), ஹர்ஷித் ராணா "வேகத்தில்" பெவிலியன் திரும்ப, ஸ்கோர் உயர வாய்ப்பு இல்லாமல் போனது. ரசல் பந்தில் கம்மின்ஸ் (24) வெளியேறினார்.

ஹைதராபாத் அணி 18.3 ஓவரில் 113 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

**வெங்கடேஷ் விளாசல்**

சுலப இலக்கை விரட்டிய கொல்கத்தா அணிக்கு நரைன் (6) ஏமாற்றினார். பின் வெங்கடேஷ் வெளுத்து வாங்கினார். புவனேஷ்வர் ஓவரில் ஒரு பவுண்டரி, 2 சிக்சர் விளாசினார். தொடர்ந்து நடராஜன் ஓவரில் 3 பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்தார். குர்பாஸ் 39 ஓட்டங்கள் எடுத்தார். அரைச்சதம் கடந்த வெங்கடேஷ், ஷாபாஸ் பந்தில் ஒரு ஓட்டம் எடுத்து வெற்றியை உறுதி செய்தார். கொல்கத்தா அணி 10.3 ஓவரில் 2 விக்கெட்டுக்களை இழந்து 114 ஓட்டங்கள் எடுத்து "மின்னல்" வேக வெற்றி பெற்றது. வெங்கடேஷ் (52), அணித் தலைவர் ஸ்ரேயாஸ் (6) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை கொல்கத்தாவின் ஸ்ரார்க் வென்றார். தொடர் நாயகன் விருதை கொல்கத்தாவின் சுனில் நரைன் (488 ஓட்., 17 விக்கெட்) தட்டிச் சென்றார்.

> **காம்பிருக்கு பெருமை**
>
> கொல்கத்தாவின் கவுதம் காம்பிர், ஐ.பி.எல்., அரங்கில் தலைவராகவும் (2012, 2014), ஆலோசகராகவும் (2024) கிண்ணம் வென்று சாதனை படைத்தார்.
>
> **1260 சிக்சர்**
>
> இம்முறை 1260 சிக்சர் பறந்தன. ஹைதராபாத்தின் அபிஷேக் அதிகபட்சமாக 42 சிக்சர் விளாசி னார். கிளாசன் (ஹைதராபாத்), கோலி (பெங்களூரு) தலா 38 சிக்சர் அடித் தனர்.
>
> **113 ரன்**
>
> ஐ.பி.எல்., பைனலில் குறைந்த பட்ச ஸ்கோரை பதிவு செய்த அணியானது ஹைதராபாத் (113/10, எதிர்: கொல்கத்தா 2024). இதற்கு முன் சென்னை அணி 125/9 ரன் (எதிர்: மும்பை, 2013) எடுத்து இருந்தது.

> **18 "டக்-அவுட்"**
>
> **ரூ. 20 கோடி பரிசு**
>
> பைனலில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணிக்கு சம்பியன் கிண்ணத் துடன், ரூ. 20 கோடி பரிசுத் தொகை வழங்கப்பட்டது. இரண்டாவது இடம் பிடித்த ஹைதராபாத் அணிக்கு ரூ. 12.5 கோடி கிடைத்தது.
>
> **கோலி "741"**
>
> அதிக ரன் எடுத்த வீரர்கள் வரிசையில் பெங்களூருவின் கோலி (741 ரன்) முதலிடம் பிடித்தார். இவருக்கு "ஓரேஞ்" நிற தொப்பி வழங்கப்பட்டது.
>
> **ஹர்ஷல் "24"**
>
> அதிக விக்கெட் சாய்த்த பந்து வீச்சாளர் பட்டியலில் பஞ்சாப்பின் ஹர்ஷல் படேல் (24 விக்கெட்) முதலிடத்தை கைப்பற்றினார். இவருக்கு "பேர்பிள்" நிற தொப்பி வழங்கப்பட்டது.

> **2174 பவுண்டரி**
>
> மொத்தம் 2174 பவுண்டரி விளாசப்பட்டது. ஹைதராபாத்தின் டிராவிஸ் ஹெட் அதிகபட்சமாக 64 பவுண்டரி விரட்டினார். ஹோலி 62 பவுண்டரி அடித்தார்.
>
> **14 சதம்**
>
> இம்முறை 14 சதம் பதிவாகின. ராஜஸ்தானின் பட்லர் 2 சதம் அடித்தார். ஜாக்ஸ், பேர்ஸ்டோவ், சூர்ய குமார், சாய் சுதர்சன், சுப்மன் கில், ருதுராஜ், சுனில் நரைன், ரோகித் சர்மா, ஸ்ராய்னிஸ், ஹெட், ஜெய்ஸ் வால் கோலி தலா ஒரு சதம் விளாசினர்.

லங்கா மஹால் (PVT) LTD
DHL
உள்நாட்டு. வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(898)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும்
கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி
செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை
எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா,
மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா அறிக்கை பக்கச் சார்பானது

# இலங்கையின் ஜெனீவா பிரதிநிதி சாடல்

**(கொழும்பு)**

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளிற்கான ஆணையாளர் அலுவலகம் இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கை குறைபாடுடையது, பக்கச்சார்பானது, சுயமாக உருவாக்கியது என ஜெனீவாவிற்கான இலங்கை தூதுவர் ஹிமாலி அருணதிலக சாடியுள்ளார்.**



ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்கெர் டேர்க்கிற்கு அறிக்கை குறித்து கடிதமொன்றை எழுதியுள்ள அவர் அந்த கடிதத்தில் இந்த குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணை எதுவும் இல்லாத நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் இலங்கை குறித்து அறிக்கை வெளியிட்டுள்ளதை தேவையற்ற ஒரு தலைப்பட்சமான முயற்சி என இலங்கை தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் நல்லிணக்கத்திற்கான தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ள தருணத்தில் இந்த அறிக்கை பக்கச்சார்பானது, அரசியல் மயப்படுத்தப்பட்டது. சுயமாக உருவாக்கப்பட்டது என ஜெனீவாவிற்கான இலங்கைத் தூதுவர் சாடியுள்ளார்.

இலங்கையின் ஆயுத மோதல் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு 15 வருடங்கள் பூர்த்தியாகிய தருணத்தில் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது என தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (நி-6)

## யாத்திரை சென்ற வான் விபத்திற்குள்ளானதில் ஒருவர் பலி

### 13 பேர் காயம்

(கொழும்பு)

கல்கமுவ, மீஓயாவிற்கு அருகில் யாத்திரை சென்று கொண்டிருந்த வான் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதெனியவில் இருந்து அனுராதபுரம் நோக்கி பயணித்த வானின் சாரதிக்கு நித்திரைக் கலக்கம் ஏற்பட்டு மீஓயா பாலத்தில் மோதி வீதியை விட்டு விலகி மீண்டும் மரத்தில் மோதி இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தின் போது வானில் சுமார் 14 பேர் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது வானில் பயணித்த ஒருவர் உயிரிழந்ததுடன், காயமடைந்த 13 பேர் கல்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


விபத்தில் உயிரிழந்தவர் எம்பிலிபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 69 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்து கல்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 7 பேர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (நி-6)

## தமிழர்களின் வாக்குகளிற்காகவே ஜனாதிபதி வடக்கிற்கு விஜயம்

### சுரேஸ் பிரேமச்சந்திரன்

(கொழும்பு)



தமிழ் மக்களின் வாக்குகளை பெறும் நோக்கிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான நிர்வாக தெரிவு, கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது, யுத்தம் முடிந்த பின்னரும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் இதுவரை தீரக்கப்படாமல் உள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதியின் வடக்கின் விஜயம் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வ தற்காகவே அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த கூட்டத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், ரெலோ இயக்கத்தின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமி மற்றும் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சியின் பிரதிநிதிகள் போன்றோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)




கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன் திரு. புஸ்பராஜ் அசான் அவர்களின் அன்புத் தந்தை

அமரர்.

திரு. மூக்கன் புஸ்பராஜ்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஆழ்ந்த அனுதாபங்கள்

யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்

(c-464)


## சுகாதாரத்துறையில் சுமார் 2000 வெற்றிடங்கள்

(கொழும்பு)

இலங்கையின் அரச சுகாதார அமைப்புக்குள் சுமார் 2,000 மருந்தாளர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாக அரச மருந்தாளர்கள் சங்கத்தின் தலைவர் துசார ரணாதேவ தெரிவித்துள்ளார்.

பொதுவாக நாட்டின் மருத்துவ [illegible] மருந்தாளர்களை [illegible]க்க வேண்டும்.

எனினும், தற்போது ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் காரணமாக சுகாதாரத் துறையில் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த நெருக்கடியை சரிசெய்ய போதுமான நடவடிக்கைகளை எடுக்க சுகாதார அமைச்சகமும், அதிகாரிகளும் தவறிவிட்டனர் என சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் நியமனங்களுக்கு மீண்டும் விண்ணப்பங்கள் கோரல்

## வட மாகாண ஆளுநர்

**(யாழ்ப்பாணம்)**

**ஆசிரியர் நியமனங்களுக்கு மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாக வட மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.**

வடக்கு மாகாண கல்வித் துறைக்குள் பட்டதாரிகளை உள்வாங்கும் நோக்குடன் 356 பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனம் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரி வித்தார். பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

"ஆசிரியர் பதவிக்கான போட்டிப் பரீட்சையில் 3000 பேர் தோற்றிய போதிலும், அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்ட 356 பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

எனினும் ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய இன்னும் இரண்டு வாரங்களில் மீண்டும் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு எஞ்சிய வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். (நி-6)

# பட்டதாரிகளுக்கான ஆசிரிய நியமனங்கள் ஜனாதிபதியால் வழங்கி வைப்பு





(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வித் துறைக்குள் பட்டதாரிகளை உள்வாங்கும் நோக்குடன் 356 பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனம் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது.

மேன்மைதங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனம் வழங்கி வைக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வட மாகாண பிரதம செயலாளர், வட மாகாண அவைத் தலைவர், பட்டதாரிகள் என பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (நி-6)



"போதைப்பொருளை புறக்கணித்து இயற்கையின் பசுமை பேணுவோம்" எனும் தொனிப் பொருளில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வருடாந்தம் வடக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் விழிப்புணர்வு மரதன் ஓட்டப் போட்டி நேற்று முன்தினம் மன்னாரில் இடம் பெற்றது.இதில் வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்-ஜோசப்நயன்)

# வில்லூன்றி மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி விநாயகராலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறவிருக்கிறது.

தினமும் காலை 7.45 மணிக்கும் பிற்பகல் 5.45 மணிக்கும் வசந்தமண்டபப் பூசை நடைபெறும்.

ஜூன் மாதம் ஐந்தாம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும், 9.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறும் என தேவஸ்தான தலைவர் அறிவித்துள்ளார். (நி-6)

# சௌத்பார் கடற்கரையில் கரை ஒதுங்கிய படகு



(மன்னார்)


மன்னார் பொலிஸ் பிரிவில் உள்ள சௌத்பார் கடற்கரைப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை ஆட்கள் இல்லாத நிலையில் மீன்பிடிப் படகு ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

குறித்த படகில் வெளி இணைப்பு இயந்திரம் பொருத்தப்பட்ட நிலை யில் படகினுள் மீன்பிடி வலைகள் மற்றும் மீன்களும் காணப்படுகின்றது.

சௌத்பார் கடற்படையினர் குறித்த படகை மீட்டுள்ளதோடு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தொழிலுக்குச் சென்ற மீனவர்களின் படகா? அல்லது வேறு மாவட்டங்களில் இருந்து காற்றுக்கு அடித்து வரப்பட்டதா? என்பது குறித்து கடற்படையினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(நி-6-285)

# எஸ்.பி.பி பாடலை கேட்டு ரசித்த ரணில்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்த போது இளைஞர் ஒருவர் பாடிய தமிழ் பாடலை கேட்டு பாராட்டியுள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த யாழ். மாவட்ட மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டிருந்தார்.

அப்போது, தென்னிந்தியாவின் மறைந்த பாடகர் பாலசுப்பிரமணியத்தின் பாடல் ஒன்றை பாடுமாறு அவையிலிருந்தவர்களிடம் கேட்டிருந்தார்.

இதன்போது, தமிழ் இளைஞர் ஒருவர், பிரபலமான தமிழ் பாடலான சுந்தரி கண்ணால் ஒரு சேதி.. எனும் பாடலை பாட அதனைக் கேட்டு வியந்த ஜனாதிபதி அவரை வெகுவாகப் பாராட்டினார்.

இதனைத் தொடர்ந்து, பிர தேச இளைஞர்களின் திறன் மற்றும் கலாசாரத் திறமை களை வெளிப்படுத்தும் நிகழ்வுகளையும் ரணில் விக்கிரமசிங்க பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.(நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் ஆரம்பிக்கப்படவுள்ள அஸ்வெசும இரண்டாம் கட்டம்

(கொழும்பு)

இலங்கையின் பல மாகாணங்களில் உள்ள கிராம உத்தியோகத்தர்கள் அஸ்வெசும பயன் திட்டத்தில் இணைந்து கொள்ளாத நிலையில் அஸ்வெசும இரண்டாம் கட்டத்தை வட மாகாணத்தில் ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

வடமாகாண கிராம உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடாமல் அரசாங்கத்தின் நலன்புரி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்தமையினால் வடமாகாணத்தில் இரண்டாம் கட்ட நிவாரணப் பணிகளை ஆரம்பிப்பது தொடர்பில் நிதியமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

தற்போது இரண்டாம் கட்ட விண்ணப்பங்கள் அனுப்பியவர்களின் தகவல்களை சரி பார்ப்பது போன்ற நடவடிக்கைகளில் இருந்து கிராம அலுவலர்கள் ஒதுங்கியுள்ளனர்.

தங்களின் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை அரசின் அஸ் வெசும மானிய திட்டத்தில் சேரமாட்டோம் என கிராம அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இரண்டாம் கட்டத்தின் கீழ் நான்கரை இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, இருபத்தி நான்கு லட்சம் குடும்பங்களுக்கு நிவாரணப் பலன்கள் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


## கல்வி

கொழும்பின் பிரபல பாடசாலை ஆசிரியரினால் தரம்- 6-O/L வரை வரலாறு, தமிழ், புவியியல் போன்ற பாடங்கள் தனியாக, குழுவாக கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு- (879)

077 697 8451

## மணமகள் தேவை

1982 இல் பிறந்த பூரட்டாதி நட்சத்திரம், அரச வேலையிலுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

(879)

077 625 9163


## 31ஆம் ஆண்டு நினைவலைகளுடன்

மலர்வு 01.01.1954



உதிர்வு 07.06.1993

அமரர்.திருமதி. நகுலேஸ்வரி நகுலராசா

திதி- சதுர்த்தி (27.05.2024)

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்று முப்பத்தோராண்டுகள்- ஆனாலும்
கண்விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள் அம்மா
உங்கள் ஆத்மா சாந்திக்காக வேண்டுகின்றோம்
என்றும் பிள்ளைகள் நாம்.

(சி-461)

ராஜன் ஹாட்வெயார்,
பருத்தித்துறை.

கணவர்-மு.நகுலராசா
மற்றும் குடும்பத்தினர்,
அம்பன்,குடத்தனை.

## 12ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்.திருமதி.சிவயோகம் செல்வராசா

(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி:- தேய் பிறை சதுர்த்தி
இன்று (27.05.2024)

(0081)

உயிரும் உணர்வும் ஊட்டமும்
உயர் வாழ்வும் தந்த எம் அன்னையே
மறவோம் எந்நாளும் நின்னை!



தோற்றம் 31.10.1928 மறைவு 07.06.2012

பேராசிரியர் மா.சின்னத்தம்பி
"சுபதர்ஷன்"
கொக்குவில் கிழக்கு,கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
மகள்மார்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# அரச வேலை வாய்ப்பு வழங்கலில் தாமதம் ஏற்படின் போராட்டம் வெடிக்கும்

## வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச வேலைகளை விரைந்து தர நடவடிக்கை எடுக்கப்படாவிடின். வடக்கில் உள்ள அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் ஒன்றிணைத்து பாரிய போராட்டம் ஒன்றினை முன்னெடுக்கவுள்ளதாக வடமாகாண பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே வடமாகாண பட்டதாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் யாழ். வருகையின் போது. அவரை நேரில் சந்திக்க முயற்சித்தோம். அது எமக்கு பயனளிக்கவில்லை. இருந்த போதிலும் ஜனாதிபதி செயலக அதிகாரியை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவரிடம் எமது கோரிக்கைகளை முன்வைத்தோம். மேலும் பட்டதாரிகளின் தரவுகளை தருமாறு கோரியுள்ளார். அவரிடம் அவற்றை கையளிக்கவுள்ளோம்.

நாங்கள் பட்டப்படிப்பை முடித்து 3 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. ஆனாலும் எமக்கான வேலை வாய்ப்புக்கள் இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. இது தொடர்பில் எமது கருத்துக்களை பாராளுமன்றில் பேச வேண்டும் என வடக்கில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கைகளை முன்வைத்து மகஜர்களையும் கையளித்துள்ளோம் என தெரிவித்தார்.(நி-6)




## விற்பனைக்கு

கல்,மண், கட்டட இடிபாடுகள், கடைக்கேற் 5, வீட்டுக்கேற் 2 சோடி. நிலைக் கதவுகள்,கிறில்கள்,நாச்சாரம் வீடு 3, ஓடுகள், பனைமரங்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு- (894)

077 723 2535


## நினைவஞ்சலி

| 37ம் ஆண்டு | 26ம் ஆண்டு | 19ம் ஆண்டு |
|---|---|---|
|  |  |  |
| திரு.அ.முத்துராஜா (முன்னாள் உப தபாலக அதிபர் தொண்டைமானாறு) | திரு.மு.பொன்னம்பலம் (இளைப்பாறிய அதிபர்) | திருமதி.பொ.இராசமணி |
| தோற்றம்: 03.04.1930 | தோற்றம்: 25.12.1914 | தோற்றம்: 23.07.1916 |
| மறைவு: 27.05.1987 | மறைவு: 02.01.1998 | மறைவு: 26.02.2005 |

காலங்கள் பல கடந்தாலும் உம் நினைவலைகள்
எம்மை விட்டகலா என்றும் உம்மை தினந்தோறும் நினைக்கின்றோமே.
வடமராட்சி பதியில் வைகாசி இருபத்தேழில் நாங்கள்
பட்ட துயரங்கள் துன்பங்கள் எம் மனதில் நீங்கா வடுபோல் நிற்கின்றதே.

(சி-462)

"முத்துவாசா"
தொண்டைமானாறு.

துயரில் வாடும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசா மீதான இராணு

# நிறுத்துங்கள்!

## சர்வதேச நீதிமன்றம் உத்தரவு

காசா மீதான தாக்குதல்களை இஸ்ரேல் முன்னெடுத்துவரும் நிலையில, குறித்த தாக்குதல்களை இனப்படுகொலையாக அறிவிக்க வேண்டும் என தென்னாபிரிக்கா ஐ.நா வின் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தது.

எனினும் தற்போது பாலஸ்தீன மக்கள் அதிகமாக வசித்து வரும் ரஃபா நகர் மீது இஸ்ரேல் ராணுவ நடவடிக்கை மேற்கொண்டு வருவதனால் அதிக அளவில் மக்கள் உயிரிழக்க வாய்ப்பு உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

காசாவில் இஸ்ரேல் இனப்படுகொலை செய்

(காசா)

ரஃபா மீதான இராணுவ ந

நிறுத்த வேண்டும் என ஐ.நா


இஸ்ரேலுக்கு உத்தரவிட்டுள்ள

உத்தரவு மிகவும் மோசமான

அரசாங்கம் அறிவித்துள்ளது.

## டில்லி தனியார் மருத்துவமனையில் பயங்கர தீ விபத்து

### 7 பச்சிளம் குழந்தைகள் உயிரிழப்பு



(டில்லி)

டில்லியில் விவேக் விஹார் பகுதியில் உள்ள தனியார் குழந்தைகள் நல மருத்துவமனை ஒன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பின்னிரவு ஏற்பட்ட தீ விபத்தில் 7 பச்சிளம் குழந்தைகள் உயிரிழந்தன. மேலும், 5 குழந்தைகள் மீட்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளன.

விபத்து குறித்து பொலிஸார் தெரிவிக்கையில் "இரவு 11.30 மணியளவில் எங்களுக்கு விவேக் விஹார் பகுதியில் உள்ள பச்சிளம் குழந்தைகளுக்கான சிகிச்சை மையத்தில் தீ விபத்து ஏற்பட்டதாக தகவல் வந்தது.

உடனடியாக தீயணைப்புத் துறைக்கும் தகவல் அளிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்றபோது அருகிலிருந்த கட்டடத்துக்கும் தீ பரவி இருந்தது. ஆனால், அதில் இருந்தோர் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. நீண்ட போராட்டத்துக்குப் பின்னர் நேற்றுக் காலை தீ அணைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## விளையாட்டு திட


## குழந்தைகள் உட்பட 2

### பலி எண்ணிக்கை அதிக

(டில்லி)

இந்தியா-குஜராத் மாநிலத்தில் உள்ள கேளிக்கை அரங்கில் உள்ள விளையாட்டு திடலில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

குஜராத் மாநிலத்தின் ராஜ்கோட் நகரில் உள்ள கேளிக்கை அரங்கில் உள்ள விளையாட்டுத் திடலில் விடுமுறை நாளான இன்று சிறுவர்கள், பெரியவர்கள்



உள்ளிட்ட பலரும் கூடியிருந்தனர்.

## தென்கொரியாவில் தூங்கும் போட்டி ஏராளமான மக்கள் பங்கேற்பு



(சியோல்)

தென் கொரியாவில் நடத்தப்பட்ட தூங்கும் போட்டியில் ஏராளமான மக்கள் பங்கேற்றுள்ளனர்.

தூக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக குறித்த போட்டி நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது போட்டியில் பங்கேற்றவர்களுக்கு பல்வேறு இடையூறுகள் விளைவிக்கப்பட்ட நிலையில் போட்டியாளர்களின் இதயத்துடிப்பைக் கணக்கிட்டு வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (நி-6)

## கார்கிவ் பிராந்தியத்தின் சி

## உக்ரைன் வச

(கீவ்)

ரஷ்ய இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டிருந்த கார்கிவ் பிராந்தியத்தின் சில பகுதிகள் தற்போது, தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமீர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள வீடியோவில்,

இம் மாத ஆரம்பத்தில், ரஷ்ய படையினர் ஆக்கிமித்து உள்நுழைந்த, கார்கிவ் பிராந்தியத்தின் சில எல்லைப் பகுதிகள் தற்போது தமது படையினரின் கட்டுப்பாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...துவ நடவடிக்கைகளை
# நிறுத்த மாட்டோம்!

...நடவடிக்கையை உடனடியாக ...நா.வின் சர்வதேச நீதிமன்றம் ...ளது. சர்வதேச நீதிமன்றத்தின் ...ான விடயம் என இஸ்ரேலிய ...து.

## இஸ்ரேல் பதிலடி

வதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் முற்றிலும் தவறானவை என்பதுடன், ரஃபாவில் போர் இலக்குகள் தொடரும் என இஸ்ரேலிய அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவு ஒழுக்க ரீதியில் அருவருப்பானது என்பதுடன், ஏற்றுக் கொள்ளத்தக்கதான விடயமும் அல்ல எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

எனவே காசா பகுதி முழுவதிலும் இருந்து ஹமாஸ் அமைப்பை ஒழித்துக்கட்டவும், பிணைக் கைதிகளை மீட்கவும் தமது இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என இஸ்ரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது. (நி-6)

# பப்புவா நியூகினியா நிலச்சரிவு உயிரிழப்பு 300 ஆக அதிகரிப்பு

(ஜகர்த்தா)

பப்புவா நியூகினியாவில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 300 ஆக உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவு நாடான பப்புவா நியூகினியாவில் கனமழை காரணமாக அங்குள்ள எங்கா மாகாணத்தின் காகோலாம் கிராமத்தில் திடீரென பாரிய நிலச்சரிவு ஏற்பட்டது.

இதனால் பல வீடுகள் சேதமடைந்ததுடன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த பலர் மண்ணில் புதையுண்டுள்ளதாக அந்நாட்டின் பேரிடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், பப்புவா நியூகினியா நாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி பலர் காணாமல் போயுள்ளதால் அவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 300 இற்கும் மேல் உயர்ந்துள்ளதாக எங்கா மாகாணத்தில் உள்ள லகாயிப் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் அய் மோஸ் அகேம் தெரிவித்துள்ளார்.

எனினும் மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம் பெற்று வருவதால் குறித்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அச்சம் தெரிவித்துள்ள அவர், மேற்படி அனர்த்தத்தில் 1,182 வீடுகள் புதையுண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அனர்த்தம் காரணமாக மீட்பு பணிகள் தொடர்ந்தும் இடம் பெற்று வருவதால் பாதிப்பு நிலவரம் குறித்த முழுமையான தகவல்கள் இன்னும் உறுதிப்படுத்தவில்லை என அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (நி-6)

# ...லில் தீ விபத்து! 24 பேர் உயிரிழப்பு!
## ...கரிக்கலாம் என அச்சம்



இந்நிலையில், அந்தக் கேளிக்கை அரங்கில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

இதில் குழந்தைகள் உள்ளிட்ட 24 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் தீ விபத்தில் பலர் சிக்கியிருக்கலாம் என்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (நி-6)

# ...சில பகுதிகள் ...சம்

...க்குள் வந்துள்ளதாக தெரவித்துள்ளார்.

எனினும், கார்கிவ் நிலவரம் குறித்து ரஷ்ய தரப்பினர் கூறும் தகவல் முரணானது என ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்ய எல்லைக்கு 5 கி.மீ. தொலைவில் உள்ள வாவ்சான்ஸ்க் நகரில் பாதியை ரஷ்ய படையினர் கைப்பற்றிய... ள்ளதாக ரஷ்ய பாராளுமன்ற உறுப்பினர் [illegible] லட்ஸ்கி தெரிவித்துள்ளார்.



வாவ்சான்ஸ்க் நகரை முழுமையாகக் கைப்பற்றிய பின்னர், அருகிலுள்ள டொனட்ஸ்க் பிராந்தியத்தின் ஸ்லோவியான்ஸ்க், க்ரமடார்ஸ்க், போக்ரொவ்ஸ்க் ஆகிய நகரங்களையும் கைப்பற்றுவதற்காக ரஷ்ய இராணுவம் முன்னேறிச் செல்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், ரஷ்யா உக்ரைன் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்தது.

இந்நிலையில், இரண்டு வருடங்களையும் தாண்டி ரஷ்ய- உக்ரைன் போர் நடந்தேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## இலவங்கப்பட்டை / கறுவாப்பட்டை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical Name - Cinnamonum Zeylanicum**
**Family - Lauraceae**
**Engl - Cinnamon**

இது நடுத்தர அல்லது மர இனத்தைச் சேர்ந்தது. தடித்த சிவப்பு கலந்த பட்டை தனி இலை எதிரிலை அடுக்கம் கொண்டது. மாசி மார்தங்களில் பூக்களைக் காணலாம். மிகுந்த வாசனை உடைய மரமாகும். இதன் இலை, பட்டைகள் மிகுந்த வாசனை உடையது. இதன் பட்டைகளின் வாசனைக்கு முக்கியமாக இருக்கும் வேதியற் சத்துக்களான நிரம்பாத கொழுப்பமிலம்(Essential oil), Eugenol, Camphor, safrol எல் லாமே மிகுந்த வாசனை (Aromatic) உடையவை ஆகும். இலவங்கம் பட்டை உணவுகளுக்கு சுவையூட்ட மற்றும் முக்கியமான சித்த மருந்துகள் பலவற்றில் சேர்க்கப்ப டுகிறது. இதன் பட்டைகள், இலைகள் மருத்துவ குணம் மிக்கவை. பொதுவாக நீரிழிவு, அதிகரித்த கொலஸ்ரோல் நிலைமை சமிபாடின்மை, கழிச்சல், சீதக்கழிச்சல், இரத்த கழிச்சல், குமட்டல், வாந்தி இருமல், ஆஸ்துமா, காசநோய்,வாத நோய்கள் பலவற்றை தீர்க்கக் கூடியது. கறுவாமரம் ஆனது இலங்கை, இந் தியா பர்மா, மலாய் தீபகற்பம் போன் றவற்றில் பயிரிடப்படுகின்றது. ஆனாலும் அதில் காணப்படும் வாசனைத் திரவியத்தின் தன்மைக்கேற்ப இலங்கையில் பயிரிட்டு அறுவடை செய்யும் கறுவாப்பட்டைக்கு வணிகரீதியாக தரம் அதிகமாகும்.





ஆனாலும் இலங்கையில பெரதெனியா, மாத்தளை, பொலநறுவை ஆகிய பகுதிகளில் அதிகளவில் அறுவடை செய்யலாம். ஆனாலும் வட மாகாணத்திலும் வளர்க்கக்கூடிய பூகோள அமைப்பு உண்டு. வடமாகணத்தில் அரச மூலிகைத் தோட்டங்களிலும் பயிரிடப்படுகின்றது. நாற்றுக்களை வளர்க்கத் தொடங்கும் போது நிழல் தரக்கூடிய இடங்களில் வளர்க்கலாம். கிட்டத்தட்ட மூன்று தொடக்கம் மூன்றரை வருடங்களின் பின்பு கறுவா மரத்தின் கிளைகளை வெட்டி மேல் தோலை சீவி பின்பு பட்டை சீவிச்சீவி எடுத்து உலர விட பட்டைகள் சுருண்டு வரும். அளவான நீர்ப் பாசனம் போதுமானது. இதன் இலைகளில் இருந்து பிரித்தெடுக்கும் எண்ணெயானது Perfume மற்றும் Flavourint industries இல் பயன்படுத்தப்படுகிறது. உடல் எடையை குறைப்பதற்காகவும் நீரழிவைக் கட்டுப் படுத்தவும் இலவங்கம்பட்டை தேநீராக அருந்தலாம்.

பொலிபினோல் , சிமைல் டிகைட் போன்ற சத்துக்களும் அதிகம் இருக்கின்றது. கெட்ட கழிவுகளை வெளியேற்றக் கூடியது. இலவங்கப் பட்டை இலகுவில் ஒடியக் கூடியது. 200 மில்லி கொதிநீரில் 15 கிராம் இலவங்கப்பட்டையை அருவல் நொருவலாக போட்டு 15 நிமிடம் நேரம் ஊறவிட்டு குடித்து வரலாம். இலவங் கப்பட்டையைப் பொடித்து நுண்ணிய பொடியாக்கி அரைத்து ஒன்று தொடக்கம் இரண்டு கிராம் அளவு தேனில் கலந்து காலை, மாலை சாப்பிட்டு வர பசி யின்மை, வயிற்றுப்போக்கு. இருமல் வயிற்று வலி, மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்று வலி போன்றவற்றை நீக்கக்கூடியது. அல்லது ஒரு மண்சட்டியில் 200 மில்லி நீர் விட்டு கால் தேக்கரண்டி இலவங்கம் பட்டை பொடியைப் போட்டு ஒரு கொதி வந்ததும் இறக்கி அருந்தி வர அதிகரித்த கொலஸ்ரோலை குறைக்கக்கூடியது. கர்ப்பப்பையை பலப்படுத்தக் கூடியது. இலவங்கம் பட்டைக்கு இனிப்பு காரச் சுவையும், கார்ப்பு, விபாகம் வெப்பமும் குளிர்ச்சியும் வீரியமும் உடையது. எனவே எல்லா நோய்களுக்கும் பயன்படுத்தக்கூடியது. பொது வாக மற்றைய மூலிகைப் பொருட்க ளுடன் சேர்த்துத் தான் பயன்படுத்துவது சிறந்ததாகும். இலவங்கம்பட்டை , ஏலரிசி, சுக்கு இலைகளை ஓர் அளவாக கலந்து பொடித்து, அரித்து 200 மில்லி கிராமில் இருந்து 600 மில்லி கிராம் வரை தேனுடன் கொடுக்க வாந்தி, வயிற்றுப்பொருமல், வலி, கழிச்சல், கடுப்பு நீங்கும். இலவங்கம்பட்டை, பெருஞ்சீரகம், சுக்கு, வாய்விடங்கம், கராம்பு ஒவ்வொன்றும் 4 கிராமாகச் சேர்த்து முறைப்படி மண்சட்டியில் குடிநீர் காய்ச்சி நாலில் ஒன்றாகக் குறுக்கி காலை, மாலை 60 தொடக்கம் 100 மில்லி கொடுத்து வர வயிற்றுப்புண், குடற்புழு, வயிற்று வலி நீங்கும். கழிச்சலுக்கு இலவங்கம் பட்டை ஒரு பங்கு எடுத்துக் காசு கட்டி மூன்று பங்கு இலைகளை கொதிக்கின்ற வெந்நீரில் ஒன்றாகக் கலக்கி 100 மில்லி அளவு குடிக்கக் கொடுக்க கழிச்சல் நீங்கும். கறுவாப்பட்டை தேநீரில் எதிர் ஒட்சியேற்ற காரணிகள் நிறைய உண்டு. இருதயத்தை பாதுகாக்கக் கூடியது புற்றுநோய் கலங்கள் வளர்வதைத் தடுக்கக் கூடியது. அத்துடன் ஆய்வுகள் மூலம் பல பக்றீரியா, வைரஸ், பங்கஸ் தொற்றுக்களையும் நீக்கக்கூடியது. பற்சிதைவு, வாய் துர்நாற்றத்தையும் நீக்கக் கூடியது. இலவங்கம் பட்டை அல்லது கறுவா பட்டையானது Cinnamom zeylanicum எனும் தாவரவியல் பெயர் கொண்ட மரமாகும். ஆனால் இலவங்கம் என்பது கராம்பு எனப்படும் மூலிகையாகும். அதனது தாவரவியல் பெயர Eugenia caryo phyllata என்னும் வேறு குடும்ப, பேரின, சிற்றின மரமாகும். அதேபோல் இலவங்கப் பத்திரி என்றால் இலை . அது Cinnamomun tamale எனும் வேறு மூலிகையாகும் .எனவே சரியான தூய இன மூலிகைகளை உருவவியல் ரீதியாக சரியாக இனம் கண்டு கொண்டால் தான் முழுமையான மருத்துவ பலன்கள் பெற்றுக் கொ[illegible]

# இன்று ஒரு தகவல் 135



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பார்வைக் குறைவு

ஒருவர் சினிமா பார்க்கப் போனார். பகல் காட்சி. அவர் சினிமாத் திரையரங்குக்குப் போய்ச் சேர்வதற்குள் படம் ஆரம்பித்து விட்டது. அவசரம் அவசரமாக ஓடிப்போய் பற்றுச்சீட்டை வாங்கிக் கொண்டு உள்ளே போனார். ஒரே இருட்டாக இருந்தது. வெளிச்சத்திலேயிருந்து இருட்டுக்குப் போயிருக்கிறார் அல்லோ. அதனாலே தட்டுத்தடுமாறி மெதுவாக நடந்து போய் ஒரு நாற்காலியில் அமர்ந்தார்.

“சார் கொஞ்சம் எழுந்து கொள்கிறீர்களா?” என்று ஒரு சத்தம். இவர் அப்படியும் இப்படியும் திரும்பிப் பார்த்தார். இந்த சத்தம் பின்னால் இருந்து வருவது போல் தெரிந்தது. “உங்களைத் தான் சார்! கொஞ்சம் எழுந்து கொள்கிறீர்களா?” என்று மறுபடியும் அதே குரல். இவர் உடனே “நானும் டிக்கெட் வாங்கிக் கொண்டு தான் சார் உள்ளே வந்திருக்கிறேன்” என்றார். அதை நான் மறுக்கவில்லை. நீங்கள் டிக்கெட் வாங்கியது நாற்காலியிலே உட்காருவதற்காக என் மடியிலே உட்காருவதற்கு இல்லை என்றது அந்தக் குரல். இவர் உடனே துள்ளி எழுந்து அடுத்ததாக அருந்த நாற்காலியிலே உட்கார்ந்து விட்டார். அதற்குப் பின் மெதுவாக இந்தப்பக்கம் திரும்பி, “மன்னித்து விடுங்கள் சார்! இருட்டிலே கண் தெரியவில்லை அதுதான் அப்படி ஆகிவிட்டது” என்று அசடு வழிந்தார்.

இப்படி ஒரு நிலைமை ஏன் ஏற்படுகின்றது? இதற்கும் விற்றமின் “ ஏ ” இற்கும் சம்பந்தம் உண்டு. சாதாரணமாக நாம் வெளிச்சத்திலே இருந்து இருட்டுக்குள்ளே போறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். கொஞ்ச நேரத்திற்கு ஒன்றுமே புரியாது. எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கும். அதற்குப் பின் ஒவ்வொன்றாகத் தெரிய ஆரம்பிக்கும். இதற்கு என்ன பெயர் சொல்கிறார்கள் என்றால் இருட்டுத் தகவமைவு அல்லது இருட்டுக்கு அனுசரிப்பு.

இப்படி அற்புதமான வேலையை செய்வதற்கு கண்ணுக்கு தேவைப் படுவது எது தெரியுமா? விற்றமின் “ ஏ ” இந்தச் சத்துக் குறைவாக உள்ளவர்கள் தான் இருட்டிலே தடுமாறுகிறார்கள். அடுத்தவர்கள் மடியிலே போய் உரிமையோடு உட்கார்ந்து விடுகிறார்கள். இந்தக் குறைபாடு நிறைய நாட்கள் நீடித்தால் அதற்குப் பின் மங்கலான வெளிச்சத்திலே கூட தடுமாறுவது போல ஆகிவிடும்.

சரி விற்றமின் “ ஏ ” எதிலே அதிகமாக இருக்கிறது? அதைக் கூறினால் ஒரு கை பார்த்து விடுகிறேன் என்கிறீர்களா? சொல்கின்றேன். நீங்கள் அசைவமாக இருந்தால் முட்டை, ஈரல் இந்தப் பக்கமாக உங்கள் கவனம் திரும்பினால் போதும். குறைபாடு சரியாகப் போய்விடும். மீன் எண்ணெய் எதிலேயிருந்து எடுக்கிறார்கள்? மீனுடைய ஈரலில் இருந்து தான்.

நீங்கள் சுத்த சைவமா? பரவாயில்லை நீங்கள் சாப்பிட வேண்டியது கீரை பழம் இது எல்லாம் தான். அகத்திக்கீரை, முள்ளங்கிக்கீரை, கரட்கீரை, முருங்கைக்கீரை, பருப்புக்கீரை, பசளைக்கீரை, கொத்த மல்லி, கறிவேப்பிலை இவற்றைக் கண்டால் விடாதீர்கள்.

மாம்பழம், பப்பாளி, கரட், பசும்பால், தாய்ப்பால் போன்றவற்றில் விற்றமின் “ ஏ ” அதிகமாக உள்ளது. குழந்தைகளுக்கு குறைந்தது ஆறுமாதமாவது தாய்ப்பால் கொடுக்க வேண்டும். பல குழந்தைகளுக்கு பார்வைக் குறைபாடு நோய் எதனாலே வருகிறது? அதற்குக் காரணம் விற்றமின் “ ஏ ” பற்றாக்குறை தான்.

இது மட்டுமல்ல குழந்தைகள் உயரமாக வளர்வதற்குக் கூட விற்றமின் “ ஏ ” ஊட்டச்சத்து அவசியம் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். அவர்கள் திடகாத்திரமாக, சோகை இல்லாமல், தொற்று நோய் வராமல் இருக்க வேண்டுமா? இவை எல்லாவற்றிற்கும் இது தேவை.

சிறிய குழந்தைகளுக்கு தடுப்பூசி போடும் போதே விற்றமின் “ ஏ ” சத்தையும் வாய் மூலமாக புகட்டலாமாம். கொஞ்சம் பெரிய பிள்ளைகளாக இருந்தால் விற்றமின் மாத்திரைகளாகக் கொடுக்கலாம். இந்தச்சத்து அதிகமாக இருக்கும் ஆகாரங்களை கொடுக்கலாம் அல்லது குழந்தைகள் எதை விரும்பி சாப்பிடுகிறார்களோ அவற்றில் விற்றமின் “ ஏ ” ஐக் கலந்து கொடுக்கலாம்.

இப்படி எல்லாம் செய்து பெரியவர்களான பின் இருட்டிலே தடுமாறி அடுத்தவர்கள் மேலே போய் உட்கார வேண்டிய அவசியம் இருக்காது.

நானும் என்னுடைய நண்பர் ஒருவரும் ஒரு சினிமா பார்ப்பதற்காகப் போனோம். பகல் காட்சி தான். உள்ளே போனதும் வழக்கம் போல் ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் மெதுவாக சரியான இடம் பார்த்து உட்கார்ந்து விட்டோம். அதற்குப் பின் அவருக்கு ஒரு ஆசை. இருட்டுக்கு அனுசரிக்கின்ற சக்தி தன்னுடைய கண்ணுக்கு போதுமான அளவு இருக்கிறதா? இல்லையா? என தெரிந்து கொள்ள வேண்டும் என்று என்னிடம் சொன்னார். நான் உடனே அவரை சோதிப்பதற்காக அவர் முகத்திற்கு நேராக மூன்று விரலைக் காட்டி “இது எத்தனை விரல்? என கூறுங்கள்” என்றேன். அவர் நன்றாக உற்றுப் பார்த்து விட்டு “உங்கள் கை எங்கே இருக்கிறது” என்று கேட்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் இடம்பெற்ற ஜே.வி.பியின் மக்கள் சந்திப்பு

## அநுரவும் பங்கேற்பு



(மன்னார்)

மன்னார் மாவட்ட மக்கள் மற்றும் தேசிய மக்கள் சக்திக்கும் இடையிலான மக்கள் சந்திப்பு நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை மன்னார். நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தி கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் ராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையில் நடை பெற்ற மக்கள் சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் அநு ரகுமார திசாநாயக்க கலந்து கொண்டார்.இதன்போது ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டு பிரமாண்ட வரவேற்பு வழங்கினர்.

குறித்த மக்கள் சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் முன்னால் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்கள், மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (நி-6-285)



2ஆம் மொழி கற்கையினை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களிற்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது.

(படம்-சப்தசங்கரி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 140 | 160 | 100-140 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 120 | 80 | 150 | 100-120 | 150 |
| தக்காளி | 300 | 200 | 250 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 140 | 100-130 | 200 |
| கோவா | 250 | 300 | 280 | 150 | 240 |
| கரட் | 300 | 250 | 300 | 200 | 400 |
| பூசணி | 100 | 80 | 100 | 80-120 | 100 |
| புடோல் | 200 | 300 | 300 | 150 | 250 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 80-100 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 200-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 220 | 250 | 250 |
| பாகற்காய் | 600 | 700 | 600 | 300 | 800 |
| வெண்டக்காய் | 150 | 200 | 150 | 200-230 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | 150 | -- | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 150 | 250-350 | 100 |
| லீக்ஸ் | 320 | 300 | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 400 | 350 | 600 | 300 | 500 |
| கறிமிளகாய் | 200 | 300 | 300 | 250 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 850 | 1000 | 400-700 | 1000 |
| போஞ்சி | 600 | 750 | 600 | 350 | 700 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 160 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 120 | 140 | 100 | 50-70 | 120 |
| தேசிக்காய் | 1000 | 1200 | 1000 | 800-1000 | 1500 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 80 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 400 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 200 | 100 | 200 | 70 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 70 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 100 | 80 | -- |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3127

### தமிழினி



வாழைப்பழும் எவ்வளவு?-ஐந்து ரூபாய்
மூன்று ரூபாய்க்கு வராதா?- மூன்று
ரூபாய்க்கு தோல் தான் வரும்
இந்த இரண்டு ரூபாய் தோலை
வைத்துக் கொண்டு பழத்தை கொடு

### ரித்விக்

அரை மணி நேரம் முன்னாடி கொண்டு
வந்திருந்தா, இவர காப்பாற்றியிருக்கலாம்!
நீங்க சொல்றதெல்லாம் சரி தான் டாக்டர்.
ஆனா இவரு அடிபட்டு 10 நிமிஷந்தானே
ஆகுது!




### கஜி


இனிமேல் எந்தப் பொண்ணாவது
அண்ணானு கூப்பிட்டு வரட்டும்



அவ சொத்துல நமக்கு பாதி பங்கு
எழுதி வாங்கிட வேண்டியது தான்

### வனிதா

நடு Centre
Fees காசு
catch புடி



இதெல்லாத்துக்கும் ஒரே meaning தானே
அப்புறம் எதுக்கு ரெண்டு தடவை சொல்றாங்க

### கவிதன்

உங்களைச் சுற்றி அதிக
பேர் இருப்பதாக பெருமை படாதீர்



முக்கியமான நேரங்களில் அவர்களால்
எந்தப் பயனும் கிடையாது.

### துஷாரா

**டிச்சர்:** ஒருத்தர் கிட்ட 200
ரூபா இருக்கு... அவரு
நாலு பிச்சைகாரர்களுக்கு
100 ரூபாயா கொடுக்குறாரு
இந்த கணக்கு சரியா??
தப்பா...??
**மாணவன்:** சரி தான் டிச்சர்
**டிச்சர்:** எப்படி ??
**மாணவன்:** நாலு பேருக்கு நல்லது
செஞ்சா எதுவுமே தப்பு இல்லை டிச்சர்....?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர்

491





போது முழுதும் எரியாத ஒரு பாய்மரம் அதிலிருந்து பிரிந்தது. கடலில் அது மிதந்து மிதந்து படகுக்கு அருகில் வந்தது. இருட்டின் காரணமாக வெகு சமீபத்தில் வரும் வரையில் அதை ஒருவரும் பார்க்கவில்லை.

பார்த்தவுடனே துடுப்பு வலியுங்கள்! துடுப்பு வலியுங்கள்! என்று இளவரசர் கூவினார்.

அவர் கூவி வாய் மூடுவதற்குள் அந்தப் பாய்மரம் படகின் அடிப்பகுதியில் இடித்தது. இடித்த வேகத்தில் படகு ‘படார்’ என்று பிளந்தது. முதலில் இரண்டு பகுதிகளாகப் பிரிந்தது. பிறகு சிறிய சிறிய பலகைத் துண்டுகளாகப் பிளந்து சிதறியது. "நண்பா! பயப்படாதே! இந்தப் படகைக் காட்டிலும் அந்தப் பாய்மரம் பத்திரமானது. தாவி அதைப் பற்றிக் கொள்!" என்றார் இளவரசர்.

திக்கும் திசையும் தெரியாதபோது கப்பல் எங்கே இருக்கிறதென்றும் தெரியாத போது துடுப்பு வலித்து ஆவது என்ன? காற்று ஓய்ந்துவிட்டது, மழை ஓய்ந்து விட்டது, இடியும் மின்னலும் நின்று விட்டன. ஆனால் அலைகளின் ஆங்காரம் மட்டும் சிறிதளவும் குன்றவில்லை.

படகு அந்த அலைகளில் தத்தளித்துக் கொண்டேயிருந்தது. சற்றும் எதிர்பாராத ஓர் அபாயம் அதை நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது. இதோ வந்துவிட்டது! எரிந்த கப்பல் முழுகிற்றல்லவா! அப்

### ஐம்பத்து மூன்றாம் அத்தியாயம் - அபய கீதம்

இளவரசர் அருள்மொழிவர்மர் பார்த்திபேந்திரனுடைய கப்பலுக்குப் போய்ச் சேரும் வரையில், தொண்டைமான் நதியின் முகத்துவாரத்தில் நின்றவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கப்பலில் இளவரசர் ஏறிக் கொண்ட உடனே அவரை ஏற்றிச் சென்ற படகு திரும்பியது. சேனாதிபதி பூதி விக்கிரமகேசரி குதூகலம் அடைந்திருந்தார் என்று அவருடைய முகக்குறி காட்டியது.

“ஆண்டவன் நம் கட்சியில் இருக்கிறார் சந்தேகமில்லை. இளவரசரின் திருமேனியில் உள்ள சங்குசக்கரச் சின்னங்கள் பழுதாகப் போய்விடுமா? பார்த்திபேந்திரன் அவரைப் பத்திரமாகக் காஞ்சி கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவான். நாமும் நம் படைகளுடன் தஞ்சையை நோக்கிப் புறப்பட வேண்டியதுதான்!" என்று தமக்குத்தாமே சொல்லுகிறவர் போல் கொடும்பாளூர் வேளார் உரத்துச் சொல்லிக் கொண்டார்.

உடனே பக்கத்திலிருந்த ஆழ்வார்க்கடியானைப் பார்த்தார். “வைஷ்ணவனே! நீ இங்கு நிற்கிறாயா? அதனால் பாதகம் இல்லை. முதன் மந்திரியின் அந்தரங்க ஒற்றனுக்குத் தெரியாதது என்ன இருக்கிறது? சரி, நீ என்ன செய்யப் போகிறாய்? மாதோட்டத்துக்கு என்னுடன் வரப் போகிறாயா?" என்று கேட்டார்.

“இல்லை, ஐயா! முதன் மந்திரி எனக்கு இட்ட இன்னும் ஒரு வேலை நான் செய்ய வேண்டியிருக்கிறது."

“அது என்ன, அப்பா?" ஆழ்வார்க்கடியான் சற்றுத் தூரத்தில் ஊமை ராணியும் பூங்குழலியும் நின்ற இடத்தை நோக்கினான். “அந்தப் பெண்களைப் பற்றிய விடயமா?" என்றார் சேனாதிபதி.

அவர்களில் ஒருவரைப் பற்றியதுதான் இலங்கையில் இத்தகைய ஊமை ஸ்திரீ ஒருத்தியைப் பார்க்க நேர்ந்தால் அவளை எப்படியாவது தஞ்சாவூருக்கு அழைத்து வரும்படி முதன் மந்திரி கட்டளையிட்டிருக்கிறார்.

நல்ல வேலை உனக்குக் கொடுத்தார். அதைக் காட்டிலும் இலங்கைக் கடல்களில் அடிக்கும் புயற் காற்றுகளில் ஒன்றைப் பிடித்துக்கொண்டு வரும்படி உனக்குச் சொல்லியிருக்கலாம். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## காக்கா ஏன் கறுப்பாச்சு?



ரொம்ப காலத்துக்கு முன்பு காக்கா வெள்ளையா இருந்ததாம். வெள்ளை என்றால் அப்படி ஒரு வெள்ளை. அப்போது எல்லாம் காக்கா ரொம்ப தூரம் பறக்குமாம். சூரியன் வரைக்கும் பறந்து போகுமாம். அப்படி இருந்த காக்கா எப்படி கருப்பாச்சு? என்று சொல்றேன்..

சூரியபூர் நாட்டோட ராஜாவுக்கு அதிக வருடம் கழித்து அழகான இளவரசி பிறந்தாராம். கொள்ளை அழகு. குழந்தையில இருந்து வீட்டை விட்டே வெளிய வரலையாம். நல்ல பெரியவங்களாகி கல்யாண வயதில் வெளியே விளை[illegible] யாட வந்தாங்க[illegible] அவங்க பேரு அங்கிகா. அவங்க விளையாடுவதை பார்த்த சூரியனுக்கு அவங்களை ரொம்ப பிடிச்சு போய் விட்டாதம் [illegible] ட்டதாம் .

தினமும் விடியற் காலையில எழுந்ததில் இருந்து சூரியனிடம் தான் பேசிக்கொண்டு இருப்பாராம். சூரியனும் பூமியை சுற்றிக் கொண்டே இளவரசியிடம் பேசிக் கொண்டு இருந்ததாம். ரொம்ப நல்ல நண்பர்களா மாறிவிட்டார்கள். ஒரு நாள் சூரியன் இந்த இளவரசிக்கு பரிசு கொடுக்க நினைத்ததாம்.

சூரியனிற்கு கிட்ட வரைக்கும் காக்கா பறந்தது இல்லையா? அதனால சூரியன் ஒரு காக்காவை கூப்பிட்டு பையில சந்தனம், வாசனைத் திரவியங்கள், முத்து மாலை எல்லாம் கொடுத்து இளவரசியிடம் கொடுத்துவிடு என்று சொல்லிவிட்டு மறைந்து போனதாம். சாயந்தரம் ஆகிவிட்டது என்றால் சூரியன் தூங்க போயிடும் இல்லையா? காக்கா அந்த பையை தூக்கி கொண்டு இளவரசி இருந்த அரண்மனை யை நோக்கி பறந்து போயிட்டு இருந்ததாம்.

வழியில திருமண ஊர்வலம் போய் கொண்டு இருந்திருக்கு. நிறைய பழங்கள், உணவுப் பொருட்கள் எடுத்து கொண்டு போனாங்க போல. காக்காவுக்கு கொஞ்ச உணவாச்சும் கிடைக்குமே என்று ஆசை. அரண்மனைக்கு போய் வந்தா தாமதமாகி போகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய சவால்களையும் வாய்ப்புகளையும் வரவேற்பவரே தன் முழுசக்தியைப் பிரயோகித்து வாழ்வில் உன்னத நிலையை அடைய முடியும். ~ பாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விதுரனிடம் சென்ற கிருஷ்ணரும் விக்னேஸ்வரனிடம் வந்த ரணிலும்

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்து போனது.

இனி யுத்தம் என்பதே முடிவு. யுத்தத்தை நடத்துவதற்கு முன்னதாக கிருஷ்ண தூது இடம்பெறவுள்ளது.

ஆம், கிருஷ்ண பகவான் கௌரவர்களிடம் தூது செல்கிறார். தூது தோல்வியில் முடியும் என்பது அவருக்கு நன்கு தெரியும். இருந்தும் ஓர் இறுதிச் சந்தர்ப்பத்தைக் கொடுப்பதுதான் முறை என்ற அடிப்படையில் கிருஷ்ண தூது நடக்கிறது. தூது தோல்வியில் முடிந்து போகிறது. குருசேத்திரத்தில் போருக்கான நாள், நேரம் தீர்மானிக்கப்படலாயிற்று.

இதில் ஓர் முக்கிய விடயம் அவதானிக்கப்பட வேண்டும். அதாவது கிருஷ்ண தூது என்பது கௌரவர்களைச் சமாதான வழிக்குக் கொண்டு வருவதற்கானதல்ல.

துரியோதனனாதியரை சமாதான வழிக்குக் கொண்டு வருவது முடியாதென்பது பார்த்தசாரதிக்கு நன்கு தெரியும்.

இருந்தும் இரண்டு நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே கிருஷ்ண தூது இடம்பெற்றது.

அதில் ஒன்று, முக்கியமான ஒருவர் சமாதானத் தூதை மேற்கொள்ள வேண்டும். அதற்குப் பொருத்தமானவர் போரை நடத்தி முடிக்கவல்ல கிருஷ்ணர்.

எனவே அவரே தூது சென்றால், போரின் முடிவில் கிருஷ்ணரை உலகம் பழியுரைக்காது. ஆதலால் கிருஷ்ண தூது தேவையாயிற்று.

மற்றையது நடக்கப் போகின்ற போரில் மிகச்சிறந்த வீரனாகிய விதுரனை பங்கேற்காமல் தடுப்பது.

ஆம், வில்லுக்கு விதுரன் என்பதுதான் பாரதப் போருக்கு முன்பான நிலைமை.

எனவே கௌரவர் தரப்பில் விதுரன் களமாடுவானாயின், போரில் வெல்வது கடினம்.

எனவே விதுரனை தம் வசப்படுத்த வேண்டிய தேவை பாண்டவர் தரப்புக்கு உண்டு. இந்த உண்மையை பாண்டவர்கள் அறியாவிடினும் பார்த்தசாரதி நன்கு அறிந்திருந்தார்.

அதனால் துரியோதனனிடம் தூது சென்ற கிருஷ்ணர் விதுரனிடம் சென்று அவரது வீட்டில் தங்கிவிட்டு, துரியோதனனிடம் தூது செல்கிறார்.

விதுரனிடம் சென்று அவரை வாலாஜப்படுத்திய பின்னரே, தனது தூதுப் பணியை கிருஷ்ணர் செய்கிறார். தூது தோல்வியில் முடிகிறது.

தர்மத்தை நிலைநாட்ட வலம்புரிச் சங்கெடுத்து கிருஷ்ண பரமாத்மா சங்கநாதம் செய்கிறார். இது பாரதத்தில் நடந்த காதை.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் வீட்டுக்குச் சென்று அவரைச் சந்தித்தார்.

இத்தகையதொரு சந்திப்பு முன்பு ஒரு போதும் நடந்ததில்லை. அப்படியானால் இது ஏன்? எனும் போதுதான் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரியுங்கள் என்று பகிரங்கமாகச் சொல்லக்கூடியவர் நீதியரசர் விக்னேஸ்வரன்.

ஆதலால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் நோக்கில் ரணில் விக்கிரமசிங்க, விக்னேஸ்வரனிடம் சென்றார் எனலாம்.

# முல்லை. மக்களின் பிரச்சினைகளை உங்களால்தான் தீர்க்க முடியும்

## ஜனாதிபதியிடம் செல்வம் எம்.பி தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மக்களின் பிரச்சனைகளை உங்களால் தான் தீர்த்து வைக்க முடியும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்ற உறுமய காணி உரித்து வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஜனாதிபதி வருகைதந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இம் மாவட்டத்தில் பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றை உங்களால் தான் தீர்த்து வைக்க முடியும் என்ற நம்பிக்கை எம் மக்களிடம் இருக்கிறது.

இந்த மாவட்ட அபிவிருத்திக் குழுவை உங்கள் தலைமையில் நடத்தி முல்லைத்தீவு மாவட்ட மக்களின் காணி உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டும். காணி உறுதியில்லாத மேலும் பலர் உள்ளனர். சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலை உள்ளது. எமது மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார். (ந-7,10)

# அடிக்கடி மின்தடை குவிகிறது முறைப்பாடு

இலங்கை மின்சார சபைக்கு நேற்று பிற்பகல் 2 மணி வரையில் 61 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மின்சாரத் தடை முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது.

மே 21 மற்றும் 26 க்கு இடைப்பட்ட கடந்த ஆறு நாட்களில் நான்கு இலட்சத்து 67 ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட மின் பாவனையாளர்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து, புகார்கள் கிடைத்ததாக மின் சாரசபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதன்படி, நேற்று பிற்பகல் 2 மணி நிலைவரப்படி 26 ஆயிரத்து 700க்கும் மேற்பட்ட மின் தடைகள் சரிசெய்யப்பட்டு சுமார் நான்கு இலட்சத்து 25 ஆயிரத்து 500 மின் பாவனையாளர்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட அனைத்து பாவனையாளர்களுக்கும் மின்சாரத்தை சீர் செய்ய மின்சார சபை நிர்வாகமும் ஊழியர்களும் 24 மணிநேரமும் உழைத்து வருகின்றனர். (ந-7,10)

# சுங்கத் திணைக்களத்தின் பேரில் நிதி மோசடி

(கொழும்பு)

சுங்கத் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்குத் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபடும் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சுங்கத் திணைக்களத்தில் உதவி அத்தியட்சகர்கள் மற்றும் சுங்க பரிசோதகர்கள் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளதாகத் தெரிவித்து குறித்த மோசடிச் சம்பவம் இடம்பெறுகிறது.

மோசடியில் ஈடுபடுபவர்கள் விண்ணப்பதாரர்களைக் கண்டறிந்து அவர்களுக்குப் பதவிகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் சுங்கத் திணைக்களத்தின் நடைமுறைக்குப் புறம்பாக எந்த அதிகாரிகளையும் உள்வாங்க முடியாது என சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ந-7,10)

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

(கபிதிகொல்லாவ)

வெசாக் வலயத்திற்கு மின்சாரம் வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக கபிதிகொல்லாவ பொலிஸார் தெரிவித்தனர்.

மரதன்மடுவ, கபிதிகொல்லாவ பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

விகாரையில் அமைக்கப்பட்டிருந்த வெசாக் வலயத்திற்கு மின்சாரம் வழங்க முற்பட்ட போது இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. (ந-7,10)

# புதிதாக நியமனம் பெற்ற கிராம சேவகர்களுக்கு முகாமைத்துவ பயிற்சி

(யாழ்ப்பாணம்)

புதிதாக நியமிக்கப்பட்ட கிராம சேவையாளர்களுக்கான நிர்வாக ரீதியான முகாமைத்துவப் பயிற்சிகள் எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (ந-7,10)

# சுழிபுரத்தில் பனைத்திருவிழா

(சுழிபுரம்)

பனைத் திருவிழா எனும் தொனிப்பொருளில் சுழிபுரம் திருவடிநிலையில் நேற்று முதல் பனை வளத்தைக் காக்கும் முகமாக விசேட செயற்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பனை சார் உணவுப் பொருள் உற்பத்தி, பனை ... நாடகங்களும் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த நிகழ்வுகளில் அதிகளவான சுற்றுலா விகள் கலந்து பயன் பெற்றார்கள் இதன் பொழுது பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தன் ஆகியோரும் கலந்து கொண்ட... (ந-7,10)

## சீரற்ற காலநிலையால்

# எட்டுப் பேர் உயிரிழப்பு; 45,509 நபர்கள் பாதிப்பு

(கொழும்பு)

தென்மேல் பருவப் பெயர்ச்சி நிலைமை காரணமாக நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலை மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் இன்று அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சீரற்ற காலநிலையுடன் கூடிய பலத்த காற்றினால் மரம் முறிந்து விழல் மற்றும் மண்மேடு சரிதல் உள்ளிட்ட விபத்துக்களினால் இதுவரை 12207 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 45509 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை (நேற்று மாலை) 08 பேர் உயிரிழந்துள்ளதுடன், 13 பேர் காயமடைந்துள்ளனர். 12 வீடுகள் முழுமையாகவும், 3166 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. (ந-7,10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வார இராசிபலன் 26.05.2024 முதல் 01.06.2024 வரை

## மேஷம்

முயற்சிகளில் வெற்றி அளிக்கும் வாரம். பொருளாதார நிலைமை சீராக இருக்கும். நண்பர்களை சந்தித்து மகிழ்ச்சியாக பேசி, மகிழ்வீர்கள். மன நிலையை பொறுத்தவரை பல்வேறு சிந்தனைகள் வந்து போகும். வாழ்க்கைத்துணை, குழந்தைகள், சொந்தபந்தம் ஆகிய உறவுகளின் போக்கு மன உளைச்சலை உருவாக்கும். உற்சாகமாக இருப்பதாக வெளியில் காட்டிக் கொண்டாலும் மனதில் ஒருவித குழப்பம் இருந்து கொண்டிருக்கும். குடும்பத்தில் உள்ள மூத்தவர்கள் அல்லது பெற்றோர்களின் ஆலோசனைகளைப் பெற்று பல சிக்கல்களுக்கு தீர்வு காண்பீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு புதிய சிக்கல் ஏற்பட்டு அகலும். தொழில் துறையினருக்கு இலாபகரமான வாரம். மேஷ ராசியில் பிறந்த சிலருக்கு திடீர் அதிர்ஷ்டம் ஏற்படும்.

---

## ரிஷபம்

வாரத் தொடக்கத்தில் இருந்த மன அழுத்தம் அகன்று மனதில் புதுத் தெம்பு ஏற்படும். மனைவி வகை உறவில் புதிய நபர்கள் அறிமுகமாவார்கள். தாமதமாகும் திருமணங்கள் நடப்பதற்கான சூழல் ஏற்படும். உறவினர்களும், உடன் பிறந்தோரும் உதவிகரமாக இருப்பார்கள். பிள்ளைகளின் கல்விக் கட்டண செலவுகளை கடன் வாங்கி சமாளிப்பீர்கள். தொழில், பணியிடங்களில் அமைதியாக இருந்து காரிய வெற்றி பெற வேண்டும். சொந்த தொழில் செய்வர்களுக்கு புதிய பங்குதாரர்கள் அறிமுகமாவார்கள். பலர் கூட்டுத்தொழில் தொடங்கும் முயற்சிகளில் உற்சாகமாக இறங்குவார்கள். பெண் நண்பர்களிடம் பேசும்போது கவனம் தேவை. மனதில் தோன்றும் திடீர் உற்சாகத்தால் தொழில், பணி, நண்பர்கள் ஆகிய விடயங்களில் உடனடி முடிவுகளை எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

---

## மிதுனம்

இந்த வாரம் மனதில் இருந்த கவலைகள் அகன்று தெளிவு பிறக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் அல்லது இடமாற்றம் ஏற்படும். அரசு உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளால் தொல்லை உருவாகும். சொந்த தொழில் செய்பவர்கள் கடன் பெற்று தொழில் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்வார்கள். தொழில் அல்லது உத்தியோகம் தொடர்பாக வெளிமாநில, வெளிநாட்டு பிரயாணங்கள் ஏற்படும். இருபால் நண்பர்களும் தக்க சமயத்தில் உதவி செய்வார்கள். சமூகத்தில் உங்கள் மதிப்பு உயரும். நடுத்தர வயதை கடந்தவர்கள் உடல் நலனில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். ஒரு சிலருக்கு வயிற்றுப்பகுதியில் அறுவை சிகிச்சை செய்யும் சூழல் ஏற்படும்.

---

## கடகம்

பழைய சிக்கல்களை தீர்த்து புதிய சிக்கல்களை சந்திக்கும் வாரம் இது. சிக்கல்கள் எதுவானாலும் அதை சந்திக்கும் மன திடமும் இருக்கும். இறை வழிபாடுகளில் மனம் செல்லும். இனம் புரியாத நம்பிக்கை மனதில் தெம்பை அளிக்கும். பல தடைகளை கடந்து செய்தொழில், உத்தியோகம் ஆகியவற்றில் புதிய விடயங்களை செயற்படுத்தி முன்னேற்றம் அடைவீர்கள். அதற்காக பாடுபட்டதால் மனச்சோர்வும், அசதியும் ஏற்படும். அமைதியாக, ஓய்வெடுத்துக்கொண்டு அவற்றை சமாளிக்க வேண்டும். குழந்தைகளின் திறமைகளை கண்டு ஆச்சரியப்படுவீர்கள். உங்கள் கருத்துக்கள் அல்லது மனஸ்தாபங்களை மற்றவர்களிடம் தெரிவித்தால் அவை உங்களுக்கு எதிராக மாறும். அதனால் மற்றவர்களிடம் பேசும்போது எச்சரிக்கை அவசியம்.

## சிம்மம்

இந்த வாரமும் மனச் சங்கடங்களும், பொருளாதார சிக்கல்களும் தொடரும். நமக்கு மட்டும் ஏன் இப்படி சிக்கல்கள் ஏற்படுகிறது என்ற எண்ணம் அடிக்கடி ஏற்படும். வாழ்க்கை துணையிடம் எதை பேசினாலும் வாக்குவாதமாக மாறுவது மன அழுத்தத்தை உருவாக்கும். வீடு, வாகனம் ஆகியவற்றில் மாற்றம் செய்யும் சூழல் சிலருக்கு ஏற்படும். கடன் பெற்று வீட்டுமனை, இடம் வாங்கும் வாய்ப்பும் சிலருக்கு உண்டு. சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு இந்த வாரம் இலாபகரமாக இருக்கும். பிள்ளைகள் வழியில் மன உளைச்சல் ஏற்படும். உதவி செய்வதாக சொன்னவர்கள் கடைசி நேரத்தில் பின் வாங்குவதால் தன்னந்தனியாக செயற்பட்டு காரிய வெற்றி பெற வேண்டிய சூழல் ஏற்படும்.

---

## கன்னி

செய்யும் உதவிகளால் பல பிரச்சினைகள் நீங்கும். மனதில் புதிய நம்பிக்கை ஏற்படும். கணவன்-மனைவியிடையே நீண்ட கால ஆசைகள் நிறைவேறுவதற்கான தொடக்கமாக இந்த வாரம் உள்ளது. எதிர்பாராத நபர்களால் அந்நியோன்னியம் அதிகமாகும். பிரயாணங்களால் நன்மைகள் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு விரும்பிய இடத்திற்கு மாற்றம் கிடைக்கும். சொந்தத் தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்று திட்டமிட்டவர்களுக்கு காலம் கனிந்து விட்டது. விருந்துகளில் பங்கேற்று மகிழ்வீர்கள். வார கடைசியில் சின்னச் சின்ன விடயங்களில் கூட உடனடியாக முடிவெடுப்பதில் குழப்பம் ஏற்படும். உங்கள் எதிராளிகள் தீட்டிய திட்டங்களை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## துலாம்

உறவுகள், நட்புகள் பொருளாதார உதவி அளிக்கும் வாரம் இது. மனதில் இனம் புரியாத குழப்பம் ஏற்படும். அதனால் குடும்பத்தில் சாதாரணமாக தெரிவிக்கும் கருத்தும் வாக்குவாதமாக மாறும். வங்கிக் கடன், நகை அடைமானம் என்று பணத்துக்காக பல இடங்களில் அலையும் சூழல் ஏற்படும். பலமுறை சிந்தித்த பின்னரே பயணங்களை மேற்கொள்ள வேண்டும். யார் மீதும் நம்பிக்கையற்ற மனநிலை உருவாகும். அதை அறிந்து அமைதியை கடைப்பிடிக்க வேண்டும். எதிர்கால நலனுக்கு உதவியாக இருக்கும் புதிய விடயங்களை அறிந்து கொள்வீர்கள். பெண்களின் அடிவயிற்று பகுதியில் சிறிய வலி ஏற்பட்டாலும் உடனடியாக மருத்துவரது ஆலோசனையைப் பெற்று சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும்.

---

## விருச்சிகம்

பல்வேறு புதிய நபர்களின் தொடர்பு ஏற்படும் வாரம் இது. உங்கள் திட்டப்படி காரியங்கள் செய்யாமல் மற்றவர்களுக்காக அவற்றை மாற்றிக்கொண்டு செயற்பட வேண்டியிருக்கும். உங்கள் தனிப்பட்ட திறமைகள் வெளிப்படும். வாழ்க்கைத் துணையின் வார்த்தைகளை கவனத்தில் கொள்ளுங்கள். குழந்தைகளிடம் கண்டிப்பாக இருக்க வேண்டும். எவ்வளவு குழப்பமான சூழலிலும் தெளிவான எண்ணத்தோடு செயற்படுவீர்கள். எதிரிகளும் நண்பர்களாக ஆவார்கள். சொந்தங்கள், நண்பர்கள் தேடி வந்து உறவு பாராட்டுவார்கள். ஒரு சிலர் உங்களிடம் கடனாக ஒரு தொகையை பெற்றுக் கொண்டும் செல்வார்கள். வண்டி, வாகனங்களுக்கு எதிர்பாராத பராமரிப்பு செலவுகள் ஏற்படும். தொழில் அல்லது பணியிடங்களில் மற்றவர்களோடு பேசும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

## தனுசு

செலவுகளை சமாளிக்க தடுமாறும் வாரம் இது. தொழில் துறையினர் தொழில் விரிவாக்க முயற்சிகளை தள்ளிப் போட வேண்டும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது அவசியம். தொழில் அல்லது உத்தியோகம் காரணமாக ஒரு சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்திருக்கும் சூழல் ஏற்படும். உத்தியோகத்தர்கள் பணியிலிருந்து விலகி விடலாம் என்ற எண்ணத்தை கட்டாயம் தவிர்த்து விட்டு வேலைகளில் கவனம் செலுத்த வேண்டும். செலவுகளை சமாளிக்க கடன் வாங்க வேண்டியிருந்தால் அளவோடு வாங்க வேண்டும். வாகனங்களில் செல்பவர்கள் அதிக வேகத்தை தவிர்க்க வேண்டும். உணவு விடயத்தில் கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டும் என்பதை உணர்த்தும் வாரம் இது.

---

## மகரம்

புதிய வாய்ப்புகள், நல்ல நம்பிக்கைகள் வாழ்வில் உருவாகும் தருணம் இது. மனதில் புதிய நம்பிக்கை துளிர் விடும். இருந்தாலும் மனதில் ஒருவித குழப்பம் நிலவுவதை தவிர்க்க இயலாது. பலரும் உங்களது ஆலோசனைகளை பெற்று செயற்படுவார்கள். உத்தியோகத்தர்கள், தொழில் துறையினர் தங்களுக்கான அங்கீகாரத்தைப் பெறுவார்கள். கணவன் - மனைவிக்குள் ஏற்பட்ட கருத்து வேற்றுமைகள் அகலும். குழந்தைகள் கல்வியில் சாதிப்பார்கள். கண்கள், அடிவயிறு, கால்கள் ஆகிய வற்றில் நோய்கள் ஏற்பட்டு சிகிச்சையால் குணமாகும். உறவினர் வருகையால் வீடு கலகலப்பாக இருக்கும். தொலைபேசியில் பேசுவதன் மூலம் பழைய உறவுகள் புதுப்பிக்கப்படும். நீண்ட நாட்களாக சந்திக்க வேண்டும் என்று நினைத்த நண்பரை சந்திப்பீர்கள்.

---

## கும்பம்

சொந்த தொழில் செய்பவர்களுக்கு கூடுதல் பொறுப்பும், இலாபமும் வந்து சேரும் வாரம் இது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் என்ன உழைத்தும் அங்கீகாரம் இல்லையே என்ற மனக்குறையுடன் பணியாற்றுவார்கள். குடும்பம், தொழில், உத்தியோகம் ஆகிய எதுவாக இருந்தாலும் மனதின் உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் அமைதியாக இருக்க வேண்டும். செலவுக் கேற்ற பணம் கைகளுக்கு எப்படியாவது வந்து விடும். தொழில் கடன், வீட்டுக்கடன், நகைக்கடன் போன்ற கடன்களுக்கு வட்டி மட்டுமே செலுத்துவதால் மன உளைச்சல் ஏற்படும். பணம் விடயத்தில் மற்றவர்களை நம்பி எவ்வித காரியத்திலும் இறங்க வேண்டாம். மற்றவர் கடனுக்காக ஜாமீன் கையெழுத்தும் இட வேண்டாம்.

---

## மீனம்

கோவில், குளம், சுபகாரியங்கள் என்று இவ்வாரம் உற்சாகமாக இருக்கும். வெளியில் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். ஆனால் உங்களுக்கு உள்ள மனச்சங்கடங்களை நினைத்து தனிமையில் வருந்துவதை யாரும் அறிய மாட்டார்கள். பல விடயங்களில் சுயமாக சிந்தித்து தனியாக செயல்பட வேண்டிய காலகட்டம் இது. வர வேண்டிய இடத்திலிருந்து பணம் வராமல் போவது, வரவை விட செலவுகள் அதிகமாக இருப்பது என்ற நிலையை சமாளிக்க வேண்டிய காலகட்டம் இது. மனதில் ஏற்பட்ட சங்கடங்களால் சரியான நேரத்துக்கு உணவு உண்ணுவதும் தாமதமாகும். இறை வழிபாட்டால் உங்கள் சங்கடங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா...

மேலும் கூறுகையில்,

மேல் மாகாணத்தை போன்று உயர் தர சுகாதார சேவைகளை கொண்ட மாகாணமாக வட மாகாணத்தை அபிவிருத்தி செய்வதே தமது நோக்கம் என்றும் அதற்காக கடந்த இரு வருடங்களில் வடக்கில் 4 மருத்துவ பிரிவுகள் திறந்து வைக்கப்பட்டதாகத் தெரிவித்த ஜனாதிபதி விரைவில் வவுனியா பல்கலைக்கழகத்தில் புதிய மருத்துவ பீடம் ஆரம்பிக்கப்படும் என்றும் உறுதியளித்தார். (ந-7,10)

## இலங்கையில்...

பட்டு வருவதாகவும் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கடுவெல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற வெசாக் நிகழ்வில் கலந்து கொண்ட அவர் இதனை அறிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றிய அவர், இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் தாக்குதல் நடத்துவதற்கு தயாராக அகமதாபாத்நகருக்கு சென்ற இலங்கை ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த நால்வர் அண்மையில் அகமதாபாத் சர்தார் படேல் சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அதன்படி ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய மேலும் பலர் நாட்டில் உள்ளனரா? என்பது குறித்து பாதுகாப்பு தரப்பினரால் தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார். (ந-7)

## இன மேலாதிக்க...

இதற்கு இன மேலாதிக்க மனோநிலையே காரணம். அதற்கு ஜனாதிபதி ரணிலும் விதிவிலக்கல்ல என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக வடக்குக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியமற்றதென குறிப்பிட்டிருந்தார்.

அவரது கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே சிறீதரன் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார்

நேற்று கௌதாரிமுனை மக்களைச் சந்தித்து சமகால அரசியல் நிலைவரங்கள் குறித்தும், அந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர், தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வழங்குவதற்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த எவரும் தயாரில்லை. சிங்களத் தலைவர்கள் ஈழத்தமிழர்களை கைப்பிள்ளைகளாகப் பயன்படுத்த நினைக்கும் மனோநிலையிலிருந்து வெளிவராத வரை இந்த நாட்டில் இன நல்லிணக்கம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றுக்கு சாத்தியமேயில்லை என்றார். (ம-7,10,316)

## ரணிலின்...

உறவினர்களால் கறுப்புக் கொடி காட்டப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வவுனியா வைத்தியசாலை மற்றும் மாவட்ட செயலகம் என்பவற்றுக்கு நேற்று வருகை தந்திருந்த நிலையில் மாவட்டச் செயலகம் முன்பாக ஒன்று கூடிய வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தை சேர்ந்தவர்கள் ஜனாதிபதியின் வருகைக்கு கறுப்புக் கொடி காட்டி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன்போது அங்கு மேலதிக பொலிஸார் மற்றும் அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு குறித்த எதிர்ப்பாளர்களை வீதிக்கு இறங்கவிடாது தடுத்தனர்.

இதன்காரணமாக, மாவட்ட செயலகம் முன்பாக ஜனாதிபதியின் கூட்டம் முடியும் வரை பரபரப்பான நிலைமை காணப்பட்டது. (ந-7,10,250)

## இலங்கைக்கான...

வாசஸ்தலத்தில் திடீர் சுகயீனம் காரணமாக அவர் உயிரிழந்துள்ளதாக இராஜகிரிய பொலிஸார் உறுதிப்படுத்தினர். (ந-7,10)

## துணிந்து...

கேற்பதற்காக புதுக்குடியிருப்பு மத்திய மகா வித்தியாலயத்துக்குச் சென்ற போது ஜனாதிபதியைச் சந்திக்க வேண்டும் எனக்கூறி அப்பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்கள், பாடசாலைக்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையறிந்த வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், இரு பெண்களும் இருந்த இடத்துக்குச் சென்று அவர்களின் பிரச்சினை தொடர்பாக வினவியபோது அவர்கள் தமது பிரச்சினையை ஜனாதிபதியிடம் முன்வைக்க வேண்டும் எனக்கோரிக்கை விடுத்தனர்.

அதனையடுத்து, வட மாகாண ஆளுநர் அந்த இரு பெண்களை பற்றி ஜனாதிபதிக்கு அறிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போராட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

காணிப் பிரச்சினை காரணமாக தாம் உட்பட கேப்பாப்பிலவு கிராமத்தில் வசிக்கும் 56 குடும்பங்கள் கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும், எனவே இதற்கு உடனடியாக தீர்வு காண ஏற்பாடு செய்யுமாறும் அந்த பெண்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர். இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தப் பிரச்சினையை விரைவாகக் கண்டறிந்து அதற்குத் தீர்வு காணுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கவுள்ளதாக தெரிவித்தார்.

அத்துடன், வட மாகாணத்தில் பெருமளவிலான காணிகளை விடுவிக்க அரசாங்கம் ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், எஞ்சியுள்ள காணிப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதே தமது எதிர்பார்ப்பு எனவும் அவர் குறிப்பிட்டார்.

போராட்டத்தில் கலந்து கொண்ட தம்மை சந்தித்து, தமது பிரச்சினைகளைக் கேட்டறிந்து தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்தமைக்கு, போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் தமது நன்றியை வெளிப்படுத்தினர். (ந-7,10

## ஒக்.17...

ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் தென்னிலங்கையில் சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திசாநாயக்க ஆகியோரது கரங்கள் உயர்ந்துள்ளன.

இந்நிலையில் ஆளும் கட்சியான பொதுஜன பெரமுன ஆட்சியதிகாரத்தை தக்கவைக்க ஜனாதிபதியின் பதவிக்காலம் நிறைவடைய முன் பொதுத் தேர்தலை நடத்திவிடும் முனைப்புடன் செயற்படுகின்றது.

இதேபோல் வடக்கிலும் தமிழ்ப்பொது வேட்பாளரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முன்னிறுத்துவது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான நிலையில் முதலில் எந்தத் தேர்தல் நடைபெறும். உள்ளூராட்சி தேர்தலின் நிலை ஜனாதிபதித் தேர்தலுக்கும் நடந்துவிடுமா என்பன உள்ளிட்ட பல கட்ட கருத்துக்கள் நிலவிவரும் நிலையில், நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதியை அறிவித்துள்ளார்.

எனினும் இதுகுறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு இன்னமும் வெளியிடவில்லை. (ந-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.05.26
சீட்டிழுப்பு இலக்கம் 5485
G 0 5 0 3 7 4
அத சம்பத G 0 3 7 4
சீட்டிழுப்பு இலக்கம் 60
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.05.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1515
N 06 08 43 50 N
Double Chance 23630

மெகா பவர்
திகதி 26/05/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1833
S 18 45 61 65 70
50447

லக்கி 7 VIP
திகதி 2024.05.26
சீட்டிழுப்பு இலக்கம் 311
L 2 5 8 7 3 1 L

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3727
சீட்டிழுப்பு திகதி 26.05.2024
H 65 73 74 76
H 09307

ஹந்தான HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.26
சீட்டிழுப்பு இலக்கம் 0794
விருச்சிகம் 01 03 05 26 விருச்சிகம்
18495 24

உத்தியோகபூர்வ முடிவுகள்
26.05.2024 வெற்றி வாரம் 193
V 7 8 9 8 7 0
21470 N
அடுத்த சுப்பர் ஜக்பொட 22,828,620.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2459 சீட்டிழுப்பு திகதி 26.05.2024 தினம் ஞாயிறு
11 49 59 62 J
93954
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 90,055,303.20

சனிதா
திகதி 2024.05.26 வெற்றி வாரம் 4620
03 08 13 33 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,758,712.80
26709

சசிரி
வெற்றி வாரம் 481
2024.05.26 கபிலம்
04 12 36
48493
06
2,404,680/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4171 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.05.26 தினம் ஞாயிற்றுக்கிழமை
04 15 39 50 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,448,286.80
998883

கப்றுக
T 15 08 29 40 49
1635 மஞ்சள் 26.05.2024 ஞாயிறு
219563
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 524,311,927.40

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2285
சீட்டிழுப்பு திகதி : 2024.05.26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 115,432,317.60
20 41 47 54 T
282538


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Srilanka
Under the purview of the
Ministry of Investment Promotion

ITP

MPCS Building,
127,K.K.S.Road, Jaffna, Srilanka
Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில்
கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

O/L பரீட்சை எய்திய மாணவர்களுக்கான
விசேட பிரிவுகள்

2024 June Batch
- Dip.in Microsoft Office
- Dip.in Desktop publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming
- Dip.in Wep Page Designing

06 Month Online Course
- Dip.in PC Application & Office Management

06 Month Languages
- VB.net
- PHP
- C/C++
- C#
- Java
- AutoCAD

20 hours Workshops
- Internet & e-mail
- Hardware

(C-0463)

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம
தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில்
பெற்றுக் கொள்ளலாம்

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 07.06.2024
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 08.06.2024

CENTRE FOR INFORMATION TECHNOLOGY
- OFFICER IN CHARGE -



அமெரிக்க லொத்தர் விசா
முடிவுகள் வெளியாகிவிட்டன

நீங்கள் அமெரிக்க அதிஸ்ட
விசா வெற்றியாளரா?
உடனடியாக எம்மை
தொடர்பு கொள்ளுங்கள்.

எமக்கூடாக விண்ணப்பித்தவர்கள் எமது
கிளைகளில் நேரடியாக பார்வையிடலாம்.

ஆரம்ப விண்ணப்பம் முதல் இறுதி விசா
நேர்காணல் வரை முழுமையாக உதவ தயாரக
உள்ளோம்.

(C-0467)

V2 TRAVELS 0768226244



V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0467)



மணமகள் தேவை

லண்டன் PR உள்ள 1986ல்
பிறந்த பூர நட்சத்திரம் 58
கிரக பாவம் உடைய மண
மகனுக்கு மணமகள் தேவை.
(878)

077 877 7547
075 022 4908


# நீமால் சூறாவளியின் தாக்கம் இலங்கையிலும்

(கொழும்பு)

கிழக்கு வங்காள விரிகுடா பகுதியில் நிலவிய தாழமுக்கம் தற்சமயம் சூறாவளியாக விரிவடைந்துள்ளது.

நீமால் என பெயரிடப்பட்டுள்ள இந்தச் சூறாவளி வடக்கு திசையாக பயணித்து இன்று அதிகாலை பங்களாதேஷ் மற்றும் அதனை அண்மித்த கிழக்கு வங்காள விரிகுடா கரையை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக, இலங்கையைச் சூழவுள்ள கடற்பகுதிகளிலும் தென்கிழக்கு அரபிக்கடல் பகுதியிலும் மணித்தியாலத்திற்கு 60 - 70 கிலோமீற்றர் வரை பலத்த காற்று வீசக்கூடும் எனவும் நாட்டைச் சூழவுள்ள கடற்பகுதி மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே கடற்றொழிலாளர்கள் மறு அறிவித்தல் வரை கடற்றொழிலில் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் கொழும்பு, நுவரெலியா, இரத்தினபுரி, கண்டி, கேகாலை, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களுக்கு தொடர்ந்தும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய, மேல், தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் இடைக்கிடையே மணித்தியாலத்திற்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ந-7.10)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (836)

076 825 7716 (ஆகாஸ்)




உடனடி வேலை வாய்ப்புக்கள்
EXECUTIVE OFFICER
✔ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✔ வயது-22 தொடக்கம் 35
✔ தகுதி- பட்டதாரிகள் (C-0467)
(ஆங்கில அறிவு அவசியமானது)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து
உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 27.04.2024 சனிக்கிழமை அன்று சிவபதம்
அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சின்னத்தம்பி தங்கவடிவேல் (மூனா)



தோற்றம் 03.12.1946
மறைவு 27.04.2024

அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (27.05.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

எம் குடும்பத்தின் பாதுகாப்பு
தெய்வமே அப்பா.
கட்டிடக் கலையதனை
கைவண்ணமாய்க் கொண்டு
ஊர் போற்ற ஊதியம் தேடி
கரம் பிடித்தவளை கண்கலங்காது
காலம் முழுவதும் பாதுகாத்து
நாமம் சொல்ல நால்வரை
பெற்றெடுத்து,
தோள் கொடுக்கும் ஆண்மக்கள்

தொலைதூரம் சென்றாலும்
எதிர்பார்ப்பு எண்ணத்தை
எப்பவும் நினைக்காமல்
ஏணியாக இருந்து
ஏற்றம் பெறச் செய்து
நீண்ட காலம் எம்முடன்
நீங்காமல் நிலைத்திருந்த காலங்கள்
என்றும் மகிழ்வானதே - அப்பா.
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்முடன்...

"உங்களின் ஆத்மா இறைவனின்
திருப்பாதம் சேர
வேலவனை வேண்டி நிற்கின்றோம்"

திருப்புகழ் மண்டப வீதி,
மீசாலை கிழக்கு.
(895)

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.